தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இபேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:211 | 15-02-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | சென்னை | மதுரை | கோவை | திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

15.02.2026 மாசி 3
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.34

திதி:
இன்று மாலை 5.50 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று இரவு 8.56 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

யோகம் :
இன்று அதிகாலை 4.08 வரை சித்தி பின்பு வ்யாதீபாதம்

கரணம் :
இன்று அதிகாலை 5.56 வரை கரசை பின்பு மாலை 5.50 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.03 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 8.36 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று மஹா சிவராத்திரி. சுபமுகூர்த்த நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# திமுக கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**ஜோலார்பேட்டை, பிப்.15:** திமுக சார்பில் வடக்கு மண்டல வாக்குச்சாவடி குழு பயிற்சி மாநாடு ஜோலார்பேட்டையை அடுத்த மண்டலவாடியில் சனிக்கிழமை நடைபெற்றது. மாநாட்டுக்கு தலைமை வகித்து முதல்வா மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தமிழ்நாட்டில் ஒவ்வொரு தொகுதியும் திமுகவின் கோட்டை என நிரூபிக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் 75,000 வாக்குச்சாவடிகள் உள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 350 வாக்குகள் வீதம் பெற வைக்க வேண்டும். 2.60 கோடி வாக்குகள் திமுகவுக்காக பெற இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது. 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவது நிச்சயம்.

வாக்காளாகளை தோ்தலுக்கு முன்னதாக ஐந்து முறையாவது சந்தித்து திராவிட மாடல் அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இதுவரை திமுகவுக்கு வாக்கு அளிக்காதவா்களாக இருந்தாலும் அவா்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும்.

மகளிா் உரிமைத் தொகை பெறும் பயனாளிகளான 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு முன்கூட்டியே ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளதால் அவா்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனா். தோ்தலைக் காரணம் காட்டி உரிமைத் தொகை வழங்குவதை நிறுத்தும் சதித் திட்டம் முறியடிக்கப்பட்டது மக்களுக்கு வியப்பாக இருந்தது; மக்களுக்கு எதிரானவா்களுக்கு அதிா்ச்சியாக இருந்தது.

பாஜக அரசு மக்களுக்கு நல்ல திட்டங்களைச் செய்ய மாட்டாா்கள். மற்றவா்களையும் செய்ய விடமாட்டாா்கள். தமிழகத்துக்கு சிறப்புத் திட்டம் எதையும் மத்திய பாஜக அரசு ஏன் அறிவிக்கவில்லையென கேட்ட கேள்விக்கு இதுவரை பிரதமா் பதிலளிக்கவில்லை.

சட்டம்- ஒழுங்கு குறித்துப் பேச அதிமுகவுக்கு தகுதியில்லை. விவசாயிகளுக்கு எதிரான வேளாண் சட்டங்கள், சிறுபான்மை மக்களுக்கு எதிரான சட்டங்கள் ஆகியவற்றுக்காக மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவித்தவா எடப்பாடி பழனிசாமி.

பாஜகவின் டப்பா என்ஜின் முன்பு திராவிட மாடல் சூப்பா் ஃபாஸ்ட் என்ஜின் தலைகுனியாது. ஏராளமான சாதனைகளை ஐந்து ஆண்டுகளில் செய்திருக்கிறோம். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதை இலக்காகக் கொண்டு பாடுபட வேண்டும்.

வேட்பாளா்கள் தோ்வு செய்வதை தலைமை பாா்த்துக் கொள்ளும். திமுக தலைமையிலான கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டியது உங்கள் கடமை என்றாா முதல்வா் ஸ்டாலின்.



திமுக பொருளாளா் டி.ஆா். பாலு, துணைப் பொதுச் செயலா க.பொன்முடி, அமைச்சா மு.பெ.சாமிநாதன் ஆகியோா முன்னிலை வகித்தனா். பொதுப் பணி, நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், வடக்கு மண்டலத் தோ்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு வரவேற்றாா். அமைச்சா்கள் எம். ஆா்.கே.பன்னீா்செல்வம், ராஜேந்திரன், ஆா். காந்தி, சட்டப்பேரவை துணைத் தலைவா கு.பிச்சாண்டி, எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோா வாழ்த்துரை வழங்கினா். எம். பி.-க்கள் சி.என்.அண்ணாதுரை, டி.எம்.கதிா் ஆனந்த், எம்எல்ஏ-க்கள் அ.நல்லதம்பி, அ.செ. வில்வநாதன், ஏ.பி.நந்தகுமாா மற்றும் எம்எல்ஏ-க்கள், கட்சி நிா்வாகிகள் கலந்து கொண்டனா். மாவட்டச் செயலரும் ஜோலாா்பேட்டை தொகுதி எம்எல்ஏ-வுமான க.தேவராஜி நன்றி கூறினாா்.

## அர்ச்சகர்களுக்கு ரூ.1,500 ஊக்கத்தொகை வழங்கினார் முதல்வர்

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 18 ஆயிரம் கோயில்கள் பயனடைந்து வரும் நிலையில், இந்த ஆண்டு நிதி வசதியற்ற 1,000 கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இதை செயல்படுத்தும் விதமாக, வைப்புநிதியாக முதலீடு செய்யும் வகையில், மின்விசை நிதி நிறுவனத்தின் இயக்குநரிடம் ரூ,25 கோடிக்கான காசோலையை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். தொடர்ந்து, ஒருகால பூஜை திட்ட கோயில்களின் அர்ச்சகர்களுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர ஊக்கத் தொகையான ரூ.1,500 வழங்கும் அடையாளமாக 10 அர்ச்சகர்களுக்கு காசோலையை வழங்கினார்.

பூஜை உபகரணங்கள்: ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், ரூ.8.58 கோடி செலவில் 19 ஆயிரம் ஒருகால பூஜை திட்ட கோயில்களுக்கு கொள்முதல் செய்யப்பட்ட பூஜை உபகரணங்களை வழங்கும் அடையாளமாக 50 கோயில்களின் அர்ச்சகர்களிடம் வழங்கினார். ஒவ்வொரு கோயிலுக் கும் ரூ.4,515 செலவில் பித்தளை தாம்பாளம், தட்டு (3 கிண்ணங்களுடன்), சொம்பு, தூபக்கால், மணி, காமாட்சிவிளக்கு மற்றும் பஞ்சபாத்திரம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சேகர்பாபு,தலைமைச் செயலர் நா.முருகானந்தம், அறநிலையத் துறைச் செயலர் க.மணிவாசன், துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் துரை.ரவிச்சந்திரன், கோ.செ. மங்கையர்க்கரசி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அவசரக்கால விமானங்கள் தரையிறங்கும் சாலை: அசாமில் பிரதமர் மோடி திறந்து வைத்தார்

**புதுடெல்லி, பிப். 15:** வரலாற்று சிறப்பு மிக்க முதல் நிகழ்வாக, பிரதமர் நரேந்திர மோடியின் விமானம் சனிக்கிழமை காலை அசாமின் மோரானில் உள்ள அவசர தரையிறங்கும் வசதியில் *(Emergency Landing Facility-ELF)* தரையிறங்கியது. இது மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதியில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

அவசர காலங்களில் இந்திய விமானப்படை போர் விமானங்கள் புறப்படுவதற்கும் தரையிறங்குவதற்கும் ஏதுவாக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலையின் பகுதி





அசாமின் மோரான் என்ற இடத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் முதல் முறையாக தரையிறங்கி இந்த வசதியை பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

அசாமில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பிரதமர் நரேந்திர மோடி ஒரு நாள் பயணமாக அங்கு சென்றுள்ளார். போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இடம்பெறும் இந்திய விமானப்படையின் 40 நிமிட வான்வழி காட்சியை பிரதமர் மோடி பார்வையிட்டார். ரூ.5,500 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்களை பிரதமர் தொடங்கிவைக்க உள்ளார்.

முன்னதாக மோடி, சாபுவா விமானநிலையத்திற்கு வந்தார். அங்கு அவரை அசாம் ஆளுநர் லட்சுமண பிரசாத் ஆச்சார்யா, முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

சாபுவாவிலிருந்து, திப்ருகார் மாவட்டத்தில் உள்ள மோரன் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அவசர தரையிறங்கும் வசதிக்குச் செல்ல இந்திய விமானப்படையின் *C-130J* விமானத்தில் பிரதமர் ஏறினார்.

ரூ.100 கோடி செலவில் கட்டப்பட்ட 4.2 கிமீ நீள வசதியில் அவர் தரையிறங்கினார். வடகிழக்கு பிராந்தியத்தில் இதுபோன்ற உள்கட்டமைப்பு அமைக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## புல்வாமா வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்த பிரதமர் மோடி!



**புதுடில்லி, பிப்.15:** புல்வாமா தாக்குதலின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி வீரர்களின் தியாகத்தை பிரதமர் மோடி நினைவுகூர்ந்துள்ளார்.

புல்வாமா தாக்குதலின் 7-ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று பிப்ரவரி 14 அனுசரிக்கப்படுகிறது.

கடந்த 2019-ஆம் ஆண்டு இதே நாளில் ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா பகுதியில் ஜம்முவில் இருந்து ஸ்ரீநகருக்கு வீரர்களை ஏற்றிக்கொண்டு சென்ற ராணுவ வாகனங்கள் மீது பயங்கரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர். இந்த துயர சம்பவத்தில் 40 சிஆர்ஃபிஎப் வீரர்கள் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட சமூக வலைத்தளப் பதிவில்,

2019-ம் ஆண்டு இந்த நாளில் புல்வாமாவில் தங்கள் உயிரைத் தியாகம் செய்த துணிச்சலான வீரர்களை நினைவு கூர்கிறேன்.

அவர்களது தேசத்திற்கான சேவை நம் உணர்வில் என்றும் பதிந்திருக்கும். ஒவ்வொரு இந்தியர்களும் அவர்களின் துணிச்சலைக் கண்டு உத்வேகம் பெறுகின்றனர். இவ்வாறு பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

# “புதுச்சேரியில் என்டிஏ அரசு ஊழலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது” - அமித் ஷா!

**காரைக்கால், பிப்.15:** புதுச்சேரியில் உள்ள என்டிஏ அரசு, ஊழலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது, சுயமாக இயங்கும் அரசை அளித்திருக்கிறது, அரசியல் ஸ்திரத்தன்மையை வழங்கி இருக்கிறது என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட காரைக்காலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: இரண்டு காரணங்களுக்காக நான் புதுச்சேரிக்கு வந்துள்ளேன். ஒன்று, பிரதமர் மோடி - முதல்வர் ரங்கசாமி ஆகியோரின் இரட்டை இன்ஜின் அரசாங்கம் புதுச்சேரிக்கு செய்துள்ள பணிகள் குறித்த அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்க வந்துள்ளேன். இரண்டாவது, இண்டியா கூட்டணியின் தீய நோக்கத்துடன் கூடிய முகத்திரையை கிழித்தெறிய வந்துள்ளேன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக, புதுச்சேரியில் இரட்டை இன்ஜின் அரசு அமைக்கப்பட்டது. புதுச்சேரியில் என்டிஏ



அரசு மூன்று வேலைகளைச் செய்துள்ளது. ஒன்று, ஊழலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இரண்டாவது, சுயமாக இயங்கும் அரசை புதுச்சேரியில் அமைத்திருக்கிறது. மூன்றாவது, இங்கே அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி இருக்கிறது.கடந்த 2019-ல் ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் நமது 40 சிஆர்பிஎஃப் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த அவர்களுக்கு எனது அஞ்சலியை காணிக்கையாக்குகிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தின்போது ஒவ்வொருநாளும் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவார்கள். காங்கிரஸ் இதனை வாடிக்கையான ஒன்றாகவே எடுத்துக்கொண்டது. நாட்டின் பிரதமரோ, உள்துறை அமைச்சரோ, பாதுகாப்பு அமைச்சரோ இத்தகைய தாக்குதல்கள் பற்றி எதுவும் பேச மாட்டார்கள்.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, பயங்கரவாத தாக்குதல்களுக்கு சரியான பதிலடி கொடுக்கப்பட்டது. புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு நாம் அவர்கள் பாகிஸ்தானில் தங்கி இருந்த இடத்தை குறி வைத்து சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடத்தினோம். இரண்டாவதாக, பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் பயங்கரவாதிகளுக்கு எதிராக வான்வழி தாக்குதல்களை நடத்தினோம். இறுதியாக, ஆபரேஷன் சிந்தூரை அரங்கேற்றி அவர்களின் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம்.

ராகுல் காந்தி பொய் பேசுவதையே தொழிலாக வைத்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்துடனும், இங்கிலாந்துடனும், அமெரிக்காவுடனும் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தால் மீனவர்கள், விவசாயிகளுக்கு ஆதாயம்தான் ஏற்படுமே தவிர எந்த ஆபத்தும் ஏற்படாது. அவர்களுக்கு முழு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் புதுச்சேரிக்காக பல திட்டங்களை பிரதமர் மோடி அளிக்க இருக்கிறார். எனவே, என்டிஏ அரசுக்கு உங்கள் முழுமையான ஆதரவை அளிக்க வேண்டும். இவ்வாறு அமித் ஷா உரையாற்றினார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
Public Notice | Loss of Share
Legal Notice | Merger
Tender Notice | Acquisition
Society Notice | AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

# திருக்குறள் குறள்-531

இறந்த வெகுளியின் தீதே சிறந்த உவகை
மகிழ்ச்சியிற் சோர்வு



பெரிய உவகையால் மகிழ்ந்திருக்கும் போது மறதியால் வரும் சோர்வு, ஒருவனுக்கு வரம்பு கடந்த சினம் வருவதைவிடத் தீமையானதாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



தேடும் போது
தொலைவதும் .....

வாய்ப்புகள்
மட்டுமல்ல
வாழ்க்கையும் தான்
....

**உஷா முத்துராமன்**

# ஸ்ரீபுரம் ஸ்ரீசக்தி அம்மா தலைமையில் ஸ்ரீசரஸ்வதி மகா யாக பூஜை!



**வேலூர், பிப். 15:** வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், ஸ்ரீபுரம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள புகழ் பெற்ற ஸ்ரீநாராயணி அம்மன் பொற்கோயிலில், அதன் நிறுவனர். ஸ்ரீசக்தி அம்மா தலைமையில், "இவ்வாண்டு பொதுத்தேர்வு எழுதவுள்ள 10,12- ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் சிறந்த முறையில் தேர்வு எழுதி அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற வேண்டும் என்ற பொதுநல நோக்கத்தில், பிப்.14-அன்று ஸ்ரீசரஸ்வதி மகா யாக பூஜை நடந்தது. இந்த பூஜை செய்து சுமார் 2000 மாணவ, மாணவிகளுக்கு (பேனாக்கள்) எழுதுகோல்கள் வழங்கி ஆசீர்வதித்தார்.

இந்த நிகழ்ச்சியில், இதய அறுவை சிகிச்சை மருத்துவர் சௌத்திரி, டாக்டர்.லீம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று சிறப்பித்தனர். இந்த ஆண்டு பொது தேர்வு எழுத உள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் பயபக்தியுடன் இந்த எழுதுகோல்களை ஸ்ரீசக்தி அம்மாவின் கரங்களில் இருந்து பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் வீடு திரும்பியது குறிப்பிடத்தக்கது.

இந்த மகா யாகத்தில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு அறுசுவை மதிய உணவு அளித்து அழகு பார்த்தார் ஸ்ரீசக்தி அம்மா.

# மாசி மாதம் தேய்பிறை சனி பிரதோஷத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, பிப்.15:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் நந்திகேச பெருமானுக்கு மாசி மாதம் தேய்பிறை, சனி பிரதோஷத்தை முன்னிட்டு ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேஸ்வரருக்கும், உற்சவர்க்கும், ஸ்ரீவீரட்டேஸ்வரர்,ஸ்ரீ நந்திபகவான் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வில்வமாலைகளுடன், அருகம்புல், வில்வம், வண்ண புஷ்பங்களால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

உற்சவர் மூன்று முறை வேத மந்திரங்கள் ஒலிக்க ஆலயம் சுற்றி வந்தது. ஏராளமான பக்தர்கள் நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# மயிலாடுதுறையில் களை கட்டிய 2-ஆம் நாள் மயூர நாட்டியாஞ்சலி ஏராளமான நாட்டிய கலைஞர்கள் பங்கேற்பு



**மயிலாடுதுறை, பிப் .15:** மயிலாடுதுறை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மகாசிவராத்திரியை முன்னிட்டு 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா அருள்மிகு மயூரநாதர் ஆலயத்தில் பிப்ரவரி 12 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இரண்டாம் நாள் மயூர நாட்டியஞ்சலி விழாவிற்கு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை அறங்காவலர் குழு தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். அறங்காவலர் குழு துணை தலைவர் சிவலிங்கம், சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை தலைவர் இசைக்கலைமணி பரணிதரன், அறக்கட்டளை செயலாளர் வாத்திய கலைமணி மாயவரம் விஸ்வநாதன், துணை செயலாளர் அகஸ்டின் விஜய், பொருளாளர் ராமன் மற்றும் அறங்காவலர்கள், அறக்கட்டளை நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இரண்டாம் நாள் மயூர நாட்டியாஞ்சலி விழாவில் கலை மற்றும் இசை துறையில் சிறந்து விளங்கி வரும் கலைஞர்கள் கங்காதரசங்கரனுக்கு மயூர முழவிசை இளவல் என்ற விருதும், காமேஸ்வரனுக்கு மயூர வேங்குழல் இளவல் என்ற விருதும், அனந்தராமனுக்கு மயூர யாழிசை இளவல் என்ற விருதும் வழங்கி பாராட்டப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் நாள் மயூர நாட்டியாஞ்சலி விழாவில் மயிலாடுதுறை ஸ்ரீஷண்முகா நாட்டியப்பள்ளி குழுவினர், சேலம் தஞ்சாவூர் த்ர்ஷ்யகாவ்ய கூடம் குழுவினர், சென்னை ந்ருத்ய சம்ஸ்ருதி ட்ரஸ்ட் குழுவினர், அமெரிக்கா நடேஷா ஸ்கூல் ஆஃப் பரதநாட்டிய குழுவினர் மற்றும் பெங்களூர் ந்ருத்ய கங்கா ப்ரதர்ஷிகா கலாகேந்த்ரா உள்ளிட்ட குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மயூர நாட்டியாஞ்சலியில் சிவனின் அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கிய நாட்டிய நிகழ்வுகள், தஞ்சை நால்வரால் இயற்றப்பட்ட பழமையான நாட்டிய நிகழ்வுகள் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

இதில் ஏராளமான நாட்டியக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர். 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா பிப்ரவரி 14 சனி நடைப்பெற்றது. 15 ஞாயிறு மாலை 5:30 மணி முதல் நள்ளிரவு வரை நடைபெற உள்ளது.

இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, சீனா, லண்டன் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் 500-க்கும் மேற்பட்ட நாட்டிய கலைஞர்கள் பங்கேற்று பல்வேறு விதமான நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர். நாட்டியாஞ்சலி விழாவிற்கான ஏற்பாடுகளை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் செய்துள்ளனர்.

# வெள்ளி நந்தி வாகனத்தில் பத்மகிரீஸ்வரர் வீதியுலா



திண்டுக்கல் அபிராமி அம்மன் கோயிலில் வெள்ளி நந்தி வாகனத்தில் பத்மகிரீஸ்வரர் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# மாசி மாத தேய்பிறை சனி பிரதோஷ வழிபாடு



**விழுப்புரம், பிப்.15:** விழுப்புரம் மாவட்டம் அறம் வளர்த்த நாயகி சமேத ஸ்ரீஅகத்தீஸ்வரர் திருக்கோயிலில் மாசி மாதம் தேய்பிறை சனி பிரதோஷத்தை முன்னிட்டு நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், சந்தனத்தினால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# கோணலூர் அருள்மிகு திருக்கோணேச்சுவரர் கோவில் கும்பாபிஷேக விழா அழைப்பு



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகில் அமைந்துள்ள கோணலூர் அருள்மிகு திருக்கோணேச்சுவரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 22.2.2026 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் கருவறை, விமானங்களுக்கு திருக்குட நன்னீராட்டு பெருவிழாவும் மாலை6.00 மணியளவில் சுவாமி திருக்கல்யாணம் நிகழ்ச்சியும் புதுச்சேரி நெட்டப்பாக்கம் சுத்தாத்துவித சைவத் திருமடம் குருமுதல்வர் குமாரசாமி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் ஆன்றோர்கள், சான்றோர்கள், ஊர் பொதுமக்கள் பங்கேற்ப்போடு வெகுவிமர்சையாக நடைபெறயுள்ளது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

# பெரும்பூண்டியில் பிரதோஷ வழிபாடு



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த பெரும்பூண்டி கிராமத்தில் எழுந்தருளிய கங்காதேவி உடனுறை கங்கை கொண்டேஸ்வரர் ஆலயத்தில் சனிப் பிரதோஷத்தை முன்னிட்டு பால் அபிஷேகம் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

# காட்பாடி கிராம தேவதை ஸ்ரீசுந்தரி அம்மன் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிப்பு!



**வேலூர்,பிப்.15:** வேலூர் மாவட்டம், காட்பாடியில் கடலூர் - சித்தூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது காட்பாடி கிராம தேவதை ஸ்ரீ சுந்தரி அம்மன். அண்மையில் தான் இந்த கோயிலில் கும்பாபிஷேகம் மற்றும் மண்டல பூஜை நடந்து நிறைவு பெற்றது. இந்நிலையில் கிராம தேவதை ஸ்ரீ சுந்தரி அம்மன் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பக்தர்கள் வரிசையில் நின்று ஸ்ரீ சுந்தரி அம்மனை தரிசித்துச் சென்றனர். குறிப்பாக உடல் நலம் குன்றியோர் மற்றும் பயந்த சுபாவம் உள்ள குழந்தைகளுக்கு மந்திர கோல் மூலம் பாஸ்கர் அர்ச்சகர் சிறப்பு பூஜைகளை நடத்தி குழந்தைகளுக்கு பயத்தை போக்கி வருகிறார். இதற்காகவே பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை இந்த சுந்தரி அம்மனை தரிசித்த வண்ணம் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. வேண்டியவர்களுக்கு வேண்டிய அருளை இந்த சுந்தரி அம்மன் வாரி வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# பரமபத வாசல் திறப்பு



அருள்மிகு உறையூர் கமலவல்லி நாச்சியார் திருக்கோயில் திருவாய்மொழி திருநாள் இராப்பத்து இரண்டாம் நாள் பரமபத வாசல் திறப்பு.

# கலைஞர் கருணாநிதி அரசு கலை கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழா




திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசு கலை கல்லூரியில் நேற்று நடந்த பட்டமளிப்பு விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன் பட்டம் வழங்கினார்.

# பகுதி நேர நியாய விலை கடை அமைத்து தரகோரிக்கை மனு



**மதுராந்தகம்,பிப்.15:** மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் புக்கத்துறை கோடித்தண்டலம், வையாவூர் பட்டுவாரி நகர் மற்றும் கருங்குழி பேரூராட்சி ஞானகிரீஸ்வரன் பேட்டை பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புக்கத்துறை கோடித்தண்டலம், வையாவூர் பட்டுவாரி நகர் மற்றும் கருங்குழி பேரூராட்சி ஞானகிரீஸ்வரன் பேட்டை பகுதியில் பகுதி நேர நியாய விலை கடை அமைத்து தர வேண்டி மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி K.மரகதம் குமரவேல் MA.MLA. EX.MP கழகம் மகளிர் அணி இணை செயலாளர் கழக செயற்குழு உறுப்பினர் அவர்களிடம் மனு அளித்தனர்.

அதனை தொடர்ந்து தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 25.26 இலட்சம் நிதி ஒதுக்கி புக்கத்துறை கோடித்தண்டலம், வையாவூர் பட்டுவாரி நகர் மற்றும் கருங்குழி பேரூராட்சி ஞானகிரீஸ்வரன் பேட்டை பகுதியில் பகுதி நேர நியாயவிலை கடை அமைப்பதற்கான பணி நடைபெற்று அதற்கான திறப்பு விழா 14.02.2026 இன்று.. மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழகப் செயலாளர் திரு VG.குமரன், அவர்கள், கருங்குழி பேரூராட்சி கழக செயலாளர் திரு RD.ஜெயராஜ் அவர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதி திரு. கோடித்தண்டலம் ரவி அவர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிற்றப்பு விருந்தினராக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மதுராந்தகம் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி K.கீதா கார்த்திகேயன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் இனிப்புகள் வழங்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கிவைத்தனர்.

அதனை தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் வருங்கால முதல்வர் புரட்சித் தமிழர் அண்ணன் எடப்பாடி யார் அவர்கள் அறிவித்த 10 முத்தான வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி உரையாற்றினேன்.

இந்நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றிய குழு துணைத் தலைவர் திரு A.குமரவேல் அவர்கள், ஒன்றிய, பேரூர் கழக உறுப்பினர்கள், ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய , நகர,கிளைக் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

## செம்பனார்கோவிலில் சமுதாய வளைகாப்பு

**மயிலாடுதுறை, பிப்.15:**

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், கர்ப்பிணி பெண்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் ஆகியோர் சீர்வரிசை பொருட்களை வழங்கினர். மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கொடி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் திட்ட அலுவலர் பிரபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த விழாவில் கர்ப்பிணி பெண்களுக்கு 5 வகையான சாதம், தாம்பூலத்தில் புடவை, மங்கலப்பொருட்கள், பூமாலை, வளையல் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உயர்கல்வித்துறை அமைச்சரிடம் ஓய்வூதியர்கள் முறையீடு

**கும்பகோணம், பிப்.15:**

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் நான்கு அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி, திருவிடைமருதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், உயர் கல்வித்துறை அமைச்சருமான கோவி. செழியன் மற்றும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை அன்பழகன் ஆகியோரை சந்தித்து, வருகின்ற பட்ஜெட் கூட்டத்தில் இதனை அமல்படுத்த வலியுறுத்தினர். சந்திப்பின்போது மாநில செயற்குழு உறுப்பினர் ஆர். ராஜகோபாலன் தலைமையில் மாநில செயற்குழு உறுப்பினர் சண்முகம், மாவட்ட இணைச் செயலாளர் வெங்கடேசன், ஓய்வுபெற்ற மருந்தாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் விஸ்வேஸ்வரன், கும்பகோணம் வட்ட துணைத் தலைவர் தங்க வளவப்பன், வட்டச் செயலாளர் பக்கிரிசாமி, வட்டப் பொருளாளர் ராமமூர்த்தி ஆகிய 12 பேர் கொண்ட குழு சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

## வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் திருவிழா ராட்டின ஏலம் ஒத்திவைப்பு

**தேனி,பிப்.15:**

தேனி வீரபாண்டி கௌமாரியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா தென் மாவட்ட அளவில் பிரசித்தி பெற்றதாகும். இந்த ஆண்டுக்கான திருவிழா வரும் மே 12 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. 8 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் 24 மணி நேரமும் நடை திறக்கப்பட்டு வழிபாடு நடைபெறுவதுடன், இரவு முழுவதும் கலைநிகழ்ச்சி, ராட்டினம் உள்ளிட்ட பல்வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இந்த ஆண்டு ராட்டினம் அமைத்தல் உள்ளிட்ட பொழுது போக்கு நிகழ்ச்சிக்கான ஏலம் நடைபெற்றது. ரூ.56 லட்சத்து 71 ஆயிரத்துக்கு முடி காணிக்கை, கண்மலர் மற்றும் உணவுக் கூடம் அமைப்பதற்காக ஏலம் விடப்பட்டது. பின்பு இயந்திர ராட்டினங்களுக்கான ஏலம் தொடங்கியது. அப்போது, கடந்தாண்டு திருவிழா வில் ராட்டினங்களுக்கான நேரம் இரவு 12 மணியாக குறைக்கப்பட்டதால், தங்களுக்கு வருவாய் இழப்பு ஏற் பட்டதாக ஒப்பந்தகாரர்கள் குற்றம் சாட்டினர். அதற்கு நேர நிர்ணயம் என்பது மாவட்ட நிர்வாகத்தின் முடிவுக்கு உட்பட்டது. ஆகவே அது குறித்து தெரிவிக்க முடியாது என்றனர். இதனைத் தொடர்ந்து மறுதேதி குறிப்பிடாமல் ஏல தேதி ஒத்தி வைக்கப்பட்டது.

## தேனியில் தூய்மை பணியாளர்கள் உள்ளிருப்பு போராட்டம்

**தேனி, பிப்.15:**

பெரியகுளம் அருகே உள்ள கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 25-க்கும் மேற்பட்டோர் ஒப்பந்த அடிப்படை யில் தூய்மைப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் அங்குள்ள தூய்மைப் பணியாளர்கள் ஊதியத்தில் தொழில் வரியாக மாதம் 1,250 ரூபாய் பிடித்தம் செய்வதாக கூறப்படுகிறது. ஆனால் தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்தில் எவ்வித பிடித்ததும் செய்யக்கூடாது என்ற தேனி மாவட்ட ஆட்சியரின் உத்தரவையும் மீறி, தொழில் வரி என்ற பெயரில் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யும் பணத்திற்கு முறையான கணக்கு விவரங்களை பேரூராட்சி நிர்வாகம் தர மறுப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இது தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர் உரிய விளக்கம் அளிக்க மறுப்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், தூய்மைப் பணியாளர்களிடம் தொழில் வரி பிடித்தம் செய்வதை ரத்து செய்யக்கோரி வெள்ளியன்று சம்பந்தப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் தேனியில் உள்ள பேரூராட்சி கள் மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்தில் புகார் அளிக்க வந்தனர். அவர்களுடன் இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்க நிர்வாகிகளும் உடன் வந்தனர். ஆனால் உதவி இயக்குநர் இல்லாததால் அவரது அலுவலகத்தில் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பறவை காய்ச்சல் பற்றிய வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் - தமிழக அரசு அறிவுறுத்தல்




**சென்னை, பிப்.15:**

தமிழ்நாட்டில் சமீபத்தில் சில மாவட்டங்களிலும், குறிப்பாக சென்னையின் ஒருசில பகுதிகளில் காகங்கள் உயிரிழந்த நிலையில் காணப்பட்டது. மருத்தும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரிகள் இதுகுறித்து ஆய்வு நடத்தினார்கள். அதில், ஒரு காகத்தில் பறவை காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் நேற்று, பறவை காய்ச்சல் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, தலைமை செயலாளர் முருகானந்தம் தலைமை தாங்கினார். அப்போது, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் பறவை காய்ச்சல் பரவும் முறை பற்றியும், தமிழ்நாட்டில் யாருக்கும் பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் விளக்கப்பட்டது.

மேலும், பறவை காய்ச்சல் பரவலை தடுக்க பொது சுகாதாரத்துறை எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட அளவில் பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு கடந்த 6-ந்தேதி ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. அதில், பல்வேறுதுறைகளுடன் இணைந்து மாவட்ட அளவில் எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கை குறித்து அறிவுறுத்தப்பட்டது. மேலும், மனிதர்களுக்கு பறவை காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து துறைகளுக்கும் அனுப்பப்பட்டது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

ஆய்வுக் கூட்டத்தை தொடர்ந்து பொதுமக்களுக்கு தமிழக அரசு வெளியிட்டுள்ள முக்கிய அறிவுரைகள் பின்வருமாறு:-

* பறவை காய்ச்சல் குறித்து மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை. எங்கேனும் காகம் மற்றும் பறவை இறந்த விவரம் அறியப்பட்டால் உடனடியாக கால்நடை துறைக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெரிவிக்க வேண்டும்.

* யாருக்கேனும் காய்ச்சல், சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் இருந்தால் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். * கோழி இறைச்சி மற்றும் முட்டை போன்ற அசைவ உணவுகளை நன்றாக சமைத்த பின்னரே சாப்பிட வேண்டும்.

* பறவை காய்ச்சல் பற்றிய வதந்திகளை நம்ப வேண்டாம். பறவை காய்ச்சல் பற்றிய சந்தேகங்களுக்கு 104 என்ற தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். எனவே, பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலூரில் 650 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா: கலெக்டர் சிபி ஆதித்யா வழங்கினார்

**கடலூர், பிப்.15:**

கடலூர் நகர்புற இடங்களில் வசிக்கும் 650 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினை கடலூர் நகர அரங்கில் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, துணைமேயர் தாமரைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:

முதலமைச்சர் உத்தரவின்படி, பொதுமக்கள் அனைவருக்கும் நிரந்தர குடியிருப்பு இருக்கும் வேண்டும் என்ற அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் தகுதிவாய்ந்த நிலமற்ற பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தேவனாம்பட்டினம் கிராமத்தில் 2004ஆம் ஆண்டு சுனாமியினால் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் நோக்கத்தில் மேற்படி நகர வார்டு-6 பிளாக்-46 இதற்குட்பட்ட பட்டாதாரர் பெயரில் உள்ள 8.3024.5 சமீ பரப்பு நிலத்தினை தமிழ்நாடு அரசின் பெயரில் கிரையம் பெற்று, "சுனாமி குடியிருப்பு" என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்விடத்தில் 648 நபர்களுக்கு 2007ஆம் ஆண்டு தொண்டு நிறுவனம் மூலம் சுனாமி வீடுகள் கட்டப்பட்டு, 2014-2015ஆம் ஆண்டு ஒப்படை நமூனா வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நீண்டகால பட்டா வழங்கும் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் மஞ்சக்குப்பம் பகுதியில் 171 நபர்களுக்கும் மற்றும் திருப்பா திரிப்புலியூர் பகுதியில் 104 நபர்களுக்கும் என மொத்தம் இன்றைய தினம் கடலூர் நகர்புற இடங்களில் வசிக்கும் 650 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணியகோட்டி, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், வருவாய் வட்டாட்சியர் மகேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஹாக்கிப் போட்டி: லயோலா கல்லூரி சாம்பியன் பட்டம் வென்றது

**சென்னை, பிப்.15:**

தென்னிந்திய அளவிலான பிரான்சிஸ் நினைவு ஹாக்கி போட்டியில் டி.ஜி. வைஷ்ணவ் கல்லூரியை 10 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி லாயோலா கல்லூரி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

சென்னை லயோலா கல்லூரியின் முன்னாள் முதல்வர் பிரான்சிஸ், எஸ்.ஜே. நினைவு ஹாக்கிப் போட்டி கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

தென்னிந்திய அளவில் பல்வேறு கல்லூரிகள் பங்கேற்ற இப்போட்டியில் இறுதிப்போட்டியில் நடப்பு சாம்பியன்களான டி.ஜி. வைஷ்ணவ் கல்லூரி லயோலா அணிகள் மோதின.

லயோலா 'வெள்ளை' அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது.

போட்டியின் முக்கிய தருணமாக அமைந்தது நவீன் அடித்த ஒரே கோல். சிறப்பாக செயல்படுத்தப்பட்ட பெனால்டி கார்னர் வாய்ப்பை அவர் கோலாக மாற்றி அணிக்கு வெற்றியை உறுதி செய்தார்.

லயோலா அணி பந்தைக் கட்டுப்பாட்டில்வைத்து க்கொண்டு எதிரணிக்கு கோல் அடிக்கும் வாய்ப்பே வழங்காமல் தடுத்தது குறிப்பிடத்தக்கது. வெற்றியடைந்த லயோலா அணிக்கு கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

# புதிய போலீஸ் டி.ஜி.பி.க்கான பெயர்களை பரிந்துரைக்க தமிழக அரசுக்கு ஒரு வாரம் கெடு

**புதுடெல்லி, பிப்.15:**



புதிய போலீஸ் டி.ஜி.பி.க்கான பெயர்களை பரிந்துரைக்க தமிழக அரசுக்கு ஒரு வாரம் கெடு விதித்து சுப்ரீம் கோர்ட் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

தமிழக போலீஸ் டி.ஜி.பி.யாக இருந்த சங்கர்ஜிவால் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ந்தேதி ஓய்வுபெற்றார். அதன்பின்னர் பொறுப்பு டி.ஜி.பி.யாக ஜி.வெங்கடராமன் நியமனம் செய்யப்பட்டார். நிரந்தர டி.ஜி.பி. நியமனம் செய்யப்படாதது குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளும் கேள்வி எழுப்பி வருகிறது.

இதற்கிடையே இந்த விவகாரம் தொடர்பாக சென்னையைச் சேர்ந்த கிஷோர் கிருஷ்ணசாமி என்பவர் சார்பில் வக்கீல் எம். வீரராகவன் சுப்ரீம் கோர்ட்டில் கோர்ட் அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, பொறுப்பு டி.ஜி.பி. நியமனம் என்பது தவறு. புது டி.ஜி.பி. நியமனம் செய்ய வேண்டும் என்ற சுப்ரீம் கோர்ட் உத்தரவை தமிழக அரசுக்கு கடைபிடிக்கவில்லை என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

அதற்கு தமிழக அரசு சார்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில், "டி.ஜி.பி. பதவிக்கு சிலரது பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. யு.பி.எஸ்.சி.யில் சில குழப்பம் நிலவுகிறது.

டி.ஜி.பி. இல்லாததால், தேர்வுக்குழுவில் கூடுதல் உள்துறை செயலாளரை இணைக்க வேண்டும் என கோரியிருந்தோம். இதற்கு யு.பி.எஸ்.சி. ஏற்கவில்லை. டி.ஜி.பி. தேர்வு செய்பவர், சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட 4 பிரிவுகளில் 10 ஆண்டு அனுபவம் பெற்று இருக்க வேண்டும் என நிபந்தனை சேர்க்கப்பட்டு உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தமிழக சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி. நியமனத்தில் தமிழகத்தை சேர்ந்த 2 அதிகாரிகள் இடம்பெற வேண்டும். அதில் ஒருவர் தலைமை செயலாளர். மற்றொருவர், டி.ஜி.பி. இல்லாத பட்சத்தில் டி.ஜி.பி. அந்தஸ்தில் உள்ளவர் குழுவில் இடம் பெற வேண்டும்.

டி.ஜி.பி. யாக தேர்வு செய்யப்படுபவர், சட்டம் ஒழுங்கு, உள்துறை உள்ளிட்ட குறிப்பிட்ட 4 பிரிவுகளில் 10 ஆண்டு அனுபவம் பெற்று இருக்க வேண்டும் என்ற விதியை தமிழகத்துக்கு தளர்த்தப்படுகிறது" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

மேலும் சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி. பதவிக்கான பெயர்களை ஒரு வாரத்துக்குள் தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்றும், அதன் பிறகு அந்த பட்டியலில் உள்ளவர்களின் பெயரை இறுதி செய்து இரண்டு வாரங்களுக்குள் யு.பி.எஸ்.சி. தேர்வு செய்து புதிய டி.ஜி.பி. பெயரை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### சர்க்கரை நோயாளிகளின் கவனத்திற்கு: உங்க தட்டில் இதெல்லாம் இருக்கா? உடனே கவனியுங்கள்!



சர்க்கரை நோயாளிகளுக்கு சரியான உணவு பழக்கவழக்கம் மிகவும் முக்கியமானது. குறிப்பாக நார்ச்சத்து நிறைந்த உணவுகள் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன. பழங்கள், காய்கறிகள், தானியங்கள் மற்றும் பயறு வகைகள் போன்ற இயற்கை உணவுகளை தினசரி உணவில் சேர்ப்பதன் மூலம் தேவையான நார்ச்சத்தை பெறலாம்.

இந்நிலையில், எந்த உணவுகளை எவ்வளவு அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும் குறித்த தகவல்களை இக்கட்டுரையில் தெரிந்து கொள்வோம்.

நன்மை பயக்கும் பழங்கள்:

ஆப்பிள் - நார்ச்சத்து மிகுதியானது.

ஆரஞ்சு - வைட்டமின் சி மற்றும் நார்ச்சத்து நிறைந்தது.

பேரிக்காய் - நார்ச்சத்து மற்றும் பல்வேறு வைட்டமின்கள் கொண்டது.

பப்பாளி - குறைந்த க்ளைசெமிக் குறியீடு உடையது மற்றும் வைட்டமின்கள் நிறைந்தது.

தர்ப்பூசணி - குறைந்த கலோரி மற்றும் அதிக நீர்ச்சத்து கொண்டது.

மாதுளை - ஆக்சிஜனேற்றத் தடுப்புப் பொருட்கள் மற்றும் நார்ச்சத்து நிறைந்தது.

கொய்யா - வைட்டமின் சி மற்றும் நார்ச்சத்து வழங்குகிறது.

திராட்சை - ஆக்சிஜனேற்றச் சத்து கொண்டது என்பதால் மிதமான அளவில் எடுத்துக்கொள்ளலாம்.

நெல்லிக்காய் - அதிக வைட்டமின் சி கொண்டது.

நுங்கு - வைட்டமின்கள் மற்றும் நார்ச்சத்து வழங்கும் இயற்கை உணவாகும்.

இந்த பழங்களைச் சாறாகக் குடிக்காமல் முழுப் பழமாக உண்பதே சிறந்தது.

அதிக நார்ச்சத்து கொண்ட காய்கறிகள்:

கீரை - 1 கப் சமைத்த கீரையில் 4 கிராம் நார்ச்சத்து உள்ளது.

புடலங்காய் - 1 கப் சமைத்த புடலங்காயில் 3 கிராம் நார்ச்சத்து உள்ளது.

சுரைக்காய் - 1 கப் சமைத்த சுரைக்காயில் 2 கிராம் நார்ச்சத்து உள்ளது.

முள்ளங்கி - 1 கப் சமைத்த முள்ளங்கியில் 3 கிராம் நார்ச்சத்து உள்ளது.

கோவைக்காய் - 1 கப் சமைத்த கோவைக்காயில் 2 கிராம் நார்ச்சத்து உள்ளது.

பீன்ஸ் - 1 கப் சமைத்த பீன்ஸில் 9 கிராம் நார்ச்சத்து உள்ளது.

கத்திரிக்காய் - 1 கப் சமைத்த கத்திரிக்காயில் 2 கிராம் நார்ச்சத்து உள்ளது.

காலிஃபிளவர் - 1 கப் சமைத்த காலிஃபிளவரில் 2.5 கிராம் நார்ச்சத்து உள்ளது.

தானியங்களில் கேழ்வரகு, தினை, சோளம், பார்லி மற்றும் ஓட்ஸ் நல்ல நார்ச்சத்து வழங்குகின்றன.

பயறுகளில் கொள்ளு, துவரம் பருப்பு, கொண்டைக்கடலை, பச்சை பயறு மற்றும் காராமணி சிறந்த ஆதாரங்களாக உள்ளன. சர்க்கரை நோயாளிகளுக்கு தினசரி தேவையான நார்ச்சத்து அளவு நபருக்கு நபர் மாறுபடும். இருப்பினும், பொதுவாக ஒரு நாளுக்கு 25 முதல் 30 கிராம் வரை நார்ச்சத்து பரிந்துரைக்கப்படுகிறது. இந்த அளவை பெற பழங்களுடன் தினமும் 2 முதல் 3 வகை காய்கறிகள், 2 முதல் 3 வகை தானியங்கள் மற்றும் 1 முதல் 2 வகை பயறுகளை உணவில் சேர்க்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நார்ச்சத்து நிறைந்த உணவுகள் உடலுக்கு பல்வேறு வகையான நன்மைகளை அளிக்கின்றன. இவற்றை தொடர்ந்து உட்கொள்வதன் மூலம் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், உடல் எடையை சமநிலைப்படுத்தவும், இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பு அளவை கட்டுப்படுத்தவும், செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

## ஐபிஎஸ் அதிகாரிகள் 3 பேருக்கு இடமாற்றம்

**சென்னை, பிப்.15:**

சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், மூன்று ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் அறிவித்து, கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார் உத்தரவிட்டுள்ளார். தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் மற்றும் மதன் ஆகியோர் சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். விஜயகுமார் திருநெல்வேலி மாநகர துணை காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## செமி கண்டக்டர் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**சென்னை, பிப்.15:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் செமி கண்டக்டர் துறையில் முக்கியமான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்காவைச் சேர்ந்த கே.எல்.ஏ.கார்ப்பரேஷன் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.3,000 கோடி முதலீடு செய்து, சென்னையில் செமி கண்டக்டர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை அமைக்க உள்ளது. இந்த மையத்தின் மூலம் சுமார் 3,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிமுக முன்னாள் அமைச்சர் மீது வழக்கு

**கரூர், பிப்.15:**

முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் அதிமுக பிரமுகர் தனபால் ஆகியோர் அரசு அனுமதியின்றி சுமார் 112 யூனிட் ஆற்று மணலை சட்டவிரோதமாக வைத்திருந்ததாக போலீசார் வழக்குப் பதிந்து மணலை பறிமுதல் செய்தனர். மணலை பறிமுதல் செய்ய முயன்ற போது அங்கு கூடிய அதிமுகவினர் தடுத்து நிறுத்தியதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சுமார் இரண்டு மணி நேர தாமதத்திற்குப் பிறகு மணல் பறிமுதல் செய்யப்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## இளைஞர்களுக்குத் தாட்கோ மூலம் 3 மாதகால திறன் பயிற்சி

**திருவள்ளூர், பிப்.15:**

திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்குத் தாட்கோ மூலம் சென்னையில் தங்கிப் பயிலும் வகையில் 3 மாதகால திறன் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. உணவு சேவை, ஆடை வடிவமைப்பு மற்றும் அழகுக்கலை போன்ற இப்பயிற்சிகளுக்கு 10 மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற, ரூ. 3 லட்சத்திற்குள் ஆண்டு வருமானம் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். தங்குமிடம் மற்றும் உணவுச் செலவுகளைத் தாட்கோ ஏற்கும் நிலையில், பயிற்சியை முடிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பும் உறுதி செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார். தகுதியுள்ளவர்கள் WWW.TAHDCO.COM என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

# ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் இன்று இரவு முழுவதும் நடை திறப்பு



**ராமேசுவரம், பிப்.15:**

மாசி மகா சிவராத்திரியை முன்னிட்டு, ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் இன்று (பிப். 15) இரவு முழுவதும் நடை திறக்கப்பட்டிருக்கும். நாளை தேரோட்டம் நடைபெறுகிறது.

ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் நடைபெறும் முக்கியமான திருவிழாக்களில் ஒன்றான மாசி மகா சிவராத்திரி விழா, கடந்த பிப். 8-ல் தொடங்கி 19-ம் தேதி வரை 12 நாட்கள் நடைபெறுகிறது.

விழாவின் 8-ம் நாளான மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று காலை 9 மணியளவில் நடராஜர் கேடயத்தில் எழுந்தருளுதல், கோயில் அனுப்பு மண்டபத்தில் பட்டயம் வாசித்தல் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இன்று இரவு 9 மணிக்கு ஒளி வழிபாடு முடிந்ததும், ராமநாத சுவாமி,

பர்வதவர்த்தினி அம்பாள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளி ரதத்தில் வீதியுலா செல்கின்றனர். மேலும், மாசி மகா சிவராத்திரியை முன்னிட்டு கோயில் நடை இரவு முழுவதும் திறக்கப்பட்டிருக்கும்.

வரும் 16-ம் தேதி காலை 10 மணியளவில் ராமநாத சுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள் தேரோட்டம் நடைபெறும்.

வரும் 17-ம் தேதி மாசி அமாவாசையை முன்னிட்டு அக்னி தீர்த்தக் கடற்கரையில் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

திருவிழாவை முன்னிட்டு, தினமும் தெற்கு நந்தவன திருக்கல்யாண மண்டபத்தில் ஆன்மிகச் சொற்பொழிவு மற்றும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சிவராத்திரி விழா



**ஸ்ரீகாளஹஸ்தி, பிப்.15:**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மகாசிவராத்திரி விழா இன்று (15-ந் தேதி) இரவு 10 மணி முதல் மறுநாள் காலை வரை நடக்கிறது. இரவில் 4 கால பூஜைகள் நடைபெறுகிறது.

அதன்படி முதல் கால பூஜை இரவு 10 மணிக்கு தொடங்கி 10.40 மணி வரையிலும், 2-ம் கால பூஜை 11 மணிக்கு தொடங்கி 11.40 மணி வரையிலும், 3-ம் கால பூஜை 12 மணிக்கு தொடங்கி 12.40 மணி வரையிலும், 4-ம் கால பூஜை நள்ளிரவு 1 மணிக்கு தொடங்கி 1.40 மணி வரையிலும் அம்மன் சன்னதியில் நடைபெறும்.

அதே போன்று சுவாமி சன்னதியில் முதல் கால பூஜை இரவு 11 மணிக்கு தொடங்கி 11.45 மணி வரையிலும், 2-ம் கால பூஜை இரவு 12 மணிக்கு தொடங்கி 12.45 மணி வரையிலும், 3-ம் கால பூஜை நள்ளிரவு 1 மணிக்கு தொடங்கி 1.45 மணி வரையிலும், 4-ம் கால பூஜை 2 மணிக்கு தொடங்கி 2.45 மணி வரையிலும் நடைபெறும்.

தொடர்ந்து அதிகாலை 3 மணிக்கு அர்த்தசாம பூஜையும், 4 மணிக்கு பள்ளியறை பூஜையும், 5 மணிக்கு திருவனந்தல் பூஜையும் நடக்கிறது.

மகா சிவராத்திரி அன்று இரவு முழுவதும் நடைபெறும் 4 கால பூஜை அபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், இளநீர், பன்னீர், பழவகைகள், தேன், மஞ்சள் பொடி, எண்ணெய், நெய் மற்றும் இதர அபிஷேக பொருட்களை இன்று மாலைக்குள் மீனாட்சி அம்மன் கோவில் உள்துறை அலுவலகத்திலும், உபகோவில்களிலும் பக்தர்கள் ஒப்படைக்கலாம்.

மேலும் சிவராத்திரி விழாவை சிறப்பிக்கும் வகையில் மீனாட்சி அம்மன் கோவிலில் இன்று மாலை 6 மணி முதல் மறுநாள் அதிகாலை வரை மங்கள இசை, பரதநாட்டியம், பக்தி இன்னிசை, ஆன்மிக சொற்பொழிவு, பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கின்றன என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஈஷாவில் இன்று மகாசிவராத்திரி விழா: மத்திய அமைச்சர் பங்கேற்பு

**கோவை, பிப்.15:**

ஈஷா யோக மையத்தில் மகாசிவராத்திரி விழா கொண்டாட்டங்கள் வரும் பிப்.15-ஆம் தேதி கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

இது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு இன்று (12/02/2025) கோவை பிரஸ் கிளப்பில் நடைபெற்றது. இதில் தென் கைலாய பக்தி பேரவையின் தன்னார்வலர் ரவீந்திரன் கலந்து கொண்டு பேசினார். அவருடன் தன்னார்வலர் சரவணன் உடனிருந்தார்.

நம் பாரத ஆன்மீக மரபில் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி நாள் மகாசிவராத்திரி திருநாளாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில் கோள்களின் அமைப்பு இயற்கையாகவே மனிதர்களின் உயிர் சக்தி மேல்நோக்கி எழுவதற்கு உதவும் வகையில் இருக்கின்றது.

இந்த ஆன்மீக சாத்தியத்தை மக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், நம் கலாசாரத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மகாசிவராத்திரி நாளில் இரவு முழுவதும் விழிப்புணர்வுடன் இருக்கும் வகையில் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் ஈஷாவில் 32-ஆவது மகாசிவராத்திரி கொண்டாட்டங்கள் வரும் 15-ஆம் தேதி மிக பிரம்மாண்டமான அளவில் நடைபெற இருக்கிறது. இதில் சிறப்பு விருந்தினர்களாக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொது மக்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

ஈஷாவில் மகாசிவராத்திரி விழா ஆதியோகி முன்பு வரும் 15-ஆம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை கொண்டாடப்பட உள்ளது.

மகாசிவராத்திரி இரவு முழுவதும் தியானலிங்கம் மற்றும் லிங்க பைரவி வளாகங்கள் பொது மக்களின் தரிசனத்திற்கு திறந்து இருக்கும். தியானலிங்கத்திற்கு பொது மக்கள் தங்களின் கைகளாலேயே அபிஷேகமும் செய்ய முடியும்.

இந்தாண்டு மகாசிவராத்திரி அன்று, முதன்முறையாக, சத்குரு ஆதியோகி முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் யோகேஷ்வர லிங்கத்திற்கு 'மஹா அபிஷேகம்' எனும் ஆன்மீக செயல்முறையை அர்ப்பணிக்க உள்ளார்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## ரயிலில் அடிபட்டு 2 பெண்கள் உயிரிழப்பு

**அம்பத்தூர், பிப்.15:**

சென்னை ஜாபர்கான்பேட்டை கே.கே.நகர் பகுதியைச் சேர்ந்தவர் நாராயணன். இவரது மனைவி ரேணுகா (55). இவரது உறவினர்கள் அதே பகுதியைச் சேர்ந்த வாசுதேவன் மனைவி ஹேமாவதி (36), திருவொற்றியூர் காலடிப்பேட்டை சேர்ந்த சதீஷ் மனைவி நந்தினி (27). இந்த நிலையில் வெள்ளியன்று 3 பேரும் கொரட்டூர் ரயில் நிலையத்திற்கு செல்வதற்காக இருப்புப்பாதையை கடக்க முயன்றனர்.

அப்போது மங்களூருவில் இருந்து சென்னை நோக்கி வந்த விரைவு ரயில் மோதியதில் சக்கரத்தில் சிக்கி ரேணுகா, ஹேமாவதி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் நந்தினி ரயிலில் அடிபட்டு படுகாயம் அடைந்தார். அங்கிருந்த பொதுமக்கள் நந்தினியை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். ரயில் வருவதை பார்த்து வாசுதேவன், சுந்தரி , பரிமளா ஆகிய 3 பேரும் ஒதுங்கி நின்றதால் உயிர் தப்பினர். தகவல் அறிந்து பெரம்பூர் இருப்புப்பாதை காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று இறந்தவர்களின் சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## ரூ.3,510 கோடி முதலீட்டில் கேஎல்ஏ இந்தியா ஆராய்ச்சி மையம்

**சென்னை, பிப்.15:**

அமெரிக்காவின் கேஎல்ஏ கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமான கேஎல்ஏ இந்தியா லிமிடெட், சென்னையில் 3,510 கோடி ரூபாய் முதலீட்டில் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் அமைக்க வெள்ளிக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

12 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமையவுள்ள இந்த வளாகத்தில், உயர் செயல்திறன், கணினி தொழில்நுட்பம், செயல்முறை கட்டுப்பாடு, பொறியியல் மென்பொருள் போன்ற துறைகளில் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பணிகள் மேற்கொள்ளப்படும். அடுத்த பத்து ஆண்டுகளில் சுமார் 4 ஆயிரம் உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. செமிகண்டக்டர் துறைக்கான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் உலகளாவிய முன்னணி நிறுவனமான கேஎல்ஏ கார்ப்பரேஷன், சிப் உற்பத்தியில் பயன்படும் ஆய்வு, அளவீடு மற்றும் தரவு பகுப்பாய்வு அமைப்புகளை உருவாக்குகிறது. உலகம் முழுவதும் உள்ள முன்னணி சிப் உற்பத்தியாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்கி, புதிய தலைமுறை செமிகண்டக்டர் வளர்ச்சியில் இந்நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

# பூமி சுழல்வது நின்றால் மனிதர்களின் நிலை என்ன? அறிவியல் விளக்கம்!

பூமி சுற்றும் வேகம் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் சுற்றும் பூமி என்றாவது ஒருநாள் நின்று விடுமோ? என்ற கேள்வி நமக்குள் எழும். அதற்கான விடை மற்றும் குன்றுகளும், மலைகளும், எரிமலைகளும், பாறைகளும் எப்படி உருவாகின்றன. இதற்கெல்லாம் காரணமாக இருப்பது என்ன? என்பதை இப்பதிவில் காண்போம்.

சூரியனுக்கும், பூமிக்கும் உள்ள ஈர்ப்பு விசையால் பூமி சுற்றும் வேகம்(EARTH ROTATION) குறைந்து கொண்டிருக்கிறது. நிலா தன்னைத்தானே சுற்றுவதற்கும் பூமியை சுற்றுவதற்கும் ஒரே நேரம்தான் ஆகும். நிலாவும் ஒரு காலத்தில் தன்னைத்தானே அதிக வேகத்துடன் சுற்றிக் கொண்டிருந்தது.

ஆனால், தற்போது ஈர்ப்பு விசை காரணமாக வேகம் குறைந்து விட்டது. புதன் கிரகத்திலும் இதே மாதிரி தான் புதன் கிரகத்தின் வேகமும். ஆனால், பூமி சூரியனிடம் இருந்து வெகு தூரத்தில் இருப்பதோடு அதிக எடையுடன் இருப்பதாலும் பூமி என்றாவது ஒருநாள் நின்று விடுமோ என்று பயப்படத் தேவையில்லை.

இரும்பாலும், நிக்கலாலும் ஆனதுதான் பூமியின் உள்ளகம். அதன் உட்பகுதி திடப்பொருளாகவும் வெளிப்பகுதி திரவமாகவும் இருக்கும் என



கருதப்படுகிறது.

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே பூமியின் மேல் ஓடும் குளிர்ந்து உறைந்து போய்விட்டது. அதுதான் இப்போது நாம் பார்க்கும் பாறைகளும், மலைகளும் குன்றுகளும். பூமியின் உள்ளகத்தைச் சுற்றி சுமார் மூவாயிரம் கிலோ மீட்டர் பருமன் உள்ள மேண்டில் அடுக்கு இருக்கிறது.

அதன் மேற்பரப்பிலேயே பூமியின் மேல் ஒரு கிரஸ்டு மிதந்துக்கொண்டிருக்கிறது. அந்த மேலோட்டின் பலம் கொண்ட சில பகுதிகளில் விரிசல் ஏற்படும் அவற்றில் அவ்வப்போது பீறிட்டு எழும் நெருப்பு பிழம்புகள் தான் எரிமலை. பூமி உருண்டையாகத் தானே இருக்கிறது. அதை துளையிட முடியுமா? என்றால் முடியாது. வெவ்வேறு நாடு உள்ளது. பூமியின் மையப்பகுதியில் வெப்பக் குழம்பு பீறிட்டு வெளிக்கிழம்பும். அது பூமியின் மேற்பரப்பில் வழிந்தோடி பரவிக் குளிரும். இதனால் பூமியில் உள்ள அனைத்து உயிர்களும் மாண்டு போகும். அதனால் பூமியின் ஒரு பக்கத்தில் இருந்து அடுத்த பக்கத்துக்கு துளையிடுவது சாத்தியம் இல்லை. மேல் நோக்கி செல்லும் புகையை பூமி ஏன் ஈர்ப்பதில்லை என்றால் புவிஈர்ப்பு விசையால்தான் புகை மேலே செல்கிறது. காற்றின் அடர்த்தியை விட புகையின் அடர்த்தி குறைவு. அதனால் புகையை விட காற்றின் மீது புவியீர்ப்பு விசை அதிகமாக இருக்கும்.



இதனால் காற்று கீழிறங்க புகை மேல் நோக்கி செல்கிறது. நீராவியைச் சுமந்து லேசான காற்று மேலே செல்வதும் மேகம் உருவாகுவதும் இப்படித்தான். தண்ணீரில் அமிழ்த்திய கார்க் மிதப்பதும் இப்படித்தான். புவியீர்ப்பு விசை இல்லை என்றால் புகை மேலே செல்லாது. ஆக புவியீர்ப்பு விசையின் காரணமாகத்தான் இதுபோன்ற நிகழ்வு நடைபெறுகிறது என்பதே இதில் இருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மை.

# பதவி நாற்காலி



" அரித்துவாரமங்கலம்
அழகான கிராமம்
விவசாயம்
தான் பிரதானம்
. உழைப்பும்
வியர்வையும் தான்
அடிப்படை சொத்து
.

அடித்தட்டு
மற்றும்
நடுத்தர மக்கள்
புழங்கும் ஒரு
சிறிய கருத்தான
கிராம் அது
. ஆலயமும்
வழிபாடும்
உண்டு .
நிமிர்ந்து
உழைக்க
வயல்வெளி மிக
அதிகம் உண்டு .

அந்த
கிராமத்தில்
மூன்று முறை
மற்றும்
பரம்பரையாக வழி
வழியாக கிராம
பஞ்சாயத்து
தலைவர்
பதவியல்
இருந்தவர் ராஜன்.

ராஜன் பதவியில்
இருந்த காலத்தில்
ஒரளவுக்கு நல்லது செய்து
வந்தார் . இரண்டு மூன்று
முறை பஞ்சாயத்து தலைவர்
பதவியில் இருந்தார் .

அமைச்சரோடு
தொடர்பில் இருந்தவர்
அவருக்காக அமைச்சரும்
வந்து ஓட்டு கேட்டார் .

தேர்தல் நெருங்கியது
மண்ணின் மைந்தன்
உழைப்பாளி வர்கத்தில்
ஒருவர் அந்த பதவிக்கு
போட்டிக்கு இறங்கி நின்றார்
ரவி .

களம் சூடு பிடித்தது
தேர்தல் காலம் நெருங்கி
ஓட்டு போடும் நேரமும்
நெருங்கி விட்டது .

ஒட்டு
அளிக்கும் நாள்
வந்தது அனைத்து
கிராமவாசியும் வந்து
வாக்களித்தனர் .

ஓட்டு எண்ணிக்கை
நடந்து முடிந்தது .
மண்ணின் மைந்தன் ரவி
வெற்றி பெற்றார் .

புதிய கதவு திறந்தது
. என்ன தான் காசு பணம்
இலவசம் இவற்றால் ஓட்டை
வாங்கினாலும்
மக்கள் யார் வந்தால்
நலம் கிடைக்கும் என்பதை
தீர்மானித்து அனைத்து
தடைகளையும் உடைத்து
மனதில் நினைத்தவரை
பதவியில் அமரச் செய்து
அழகு பார்க்கும் நேரமும்
உண்டு.

பல இடங்களில்
பிரபலங்கள் மண்ணை
கவ்வுவதும் சில இடங்களில்
புதுமுகம் கூட பதவியை
அடைவதும் ஜனநாயகம்
எனும் கோட்டை காட்டும்
அழுத்தமான வேலி .

அரசியல்வாதிகள்
என்ன வார்த்தை ஜாலம்
காட்டினாலும் ரவி போன்ற
சிலரை அடையாளம்
காட்டிக் கொண்டு
செல்கிறது ஜனநாயகம் .

குடிசை வீடுகள்
கான்கிரிட் வீடு ஆனதும்
காலனி பகுதி பட்டா
ஆனதும் புதிய
பாலம் கட்டி
சமத்துவம்
பெருகியதும்
ரவி பதவியில்
வாயிலாக செய்த
சாதனை செயல்.

ரவி அதிகம்
படிக்காத போதும்
படித்தவர்களை
படிப்பவர்களை
ஊக்கப்படுத்தி
வழிகாட்டி
பொருலுதவி
செய்து உயர
வைத்ததும்
ரவிக்கு இரண்டாவது முறை
பதவி ஏற்கும் வாய்ப்பை
பெற்றுத் தந்தது .

மக்கள் மனதில்
இடம் பிடித்து விட்டால்
அதிகாரமும் பணமும்
இலவசமும் துரோகமும்
இடம் தெரியாமல்
காணாமல் போய் விடும்
என்பது ரவி இந்த
சமுதாயத்திற்கு காட்டிய மீள்
பாதை ... "

பதவி நாற்காலி
சொல்லத் தரும் பாடம்
கணக்கில் அடங்காது.
ஆயிரம் ஆயிரம் ரவிகள்
இந்த கிராமங்கள் முன்னேற
வேண்டும் என்பது மட்டும்
மாறாத உண்மை .. "

**- சீர்காழி.**
**ஆர். சீதாராமன்.**

# "தட்டிப் பறித்த மரணம்"



மாலை நேரம். ரயில்
மெதுவாக கிளம்பத்
தயாரானது.

பிளாட்பாரத்தில் கூட்டம்.
"காபி... சாம்பார் வடை..."
என்று குரல்கள்.
ஜன்னலருகே
அமர்ந்திருந்தவன் தனது
மொபைலை கையில்
வைத்தபடி பதட்டமாய்
இருந்தான். அவன் கண்கள்
கூட்டத்தைக் கணக்கிடுவது
போல ஓடியது. வியர்வை
துளிகள் நெற்றியில் மின்னின.

ரயில் ஹார்ன் ஒலித்தது.
அந்தக் கணத்தில்
பிளாட்பாரத்தின் நிழலில்
காத்திருந்தவன் ஓடி வந்து,
ஜன்னல் வழியாக கையை
நுழைத்து ஜன்னலோரப்
பயணியின் மொபைலை தட்டிப்
பறித்தான்!
"என் மொபைல்... என்
மொபைல்... திருடன்!" என்று
ஜன்னலுக்குள் இருந்தவன்
அலறினான்.
ரயில் வேகமெடுத்தது.
பயணிகள் சிலர் ஜன்னலுக்கு
வெளியே எட்டிப் பார்த்தார்கள்.
திருடன் கூட்டத்தை தாண்டி
ஓடிக் கொண்டிருந்தான்.
"போச்சு... அவ்வளவுதான்"
சிலர் சலிப்புடன்
சொன்னார்கள்.

மொபைலைப் பறி
கொடுத்தவன் முகத்தில்
பதட்டம் நீங்கி பயம்
குடியேறியது.
திருடன் ஒரு பழைய
கிடங்கிற்குள் புகுந்தான். மூச்சு
முட்டியது.
மொபைலை பார்த்தான். விலை
உயர்ந்த மாடல்.
"ஆன் பண்ணிப்
பார்க்கலாமே..." என்று
பொத்தானை அழுத்தினான்.
திரை ஒளிர்ந்தது.
கூடவே ஒரு மெல்லிய "டிக்...
டிக்..." சத்தம். அவன் புரியாமல்
திரையைத் தேய்த்துப்
பார்த்தான்.
அடுத்த வினாடி,
"டமார்"

அவன் கையிலிருந்த மொபைல்
வெடித்துச் சிதறியது. சுவர்கள்
கருகின. புகை பரவியது.
அவன் உயிரற்ற உடல்
தெறித்துப் போய் விழுந்தது.
அதே நேரம், வேகமெடுத்த
ரயிலில்,
ஜன்னலருகே
அமர்ந்திருந்தவன் கண்களில்
நம்ப முடியாத அதிர்ச்சி.
அவன் திட்டமே வேறு.
ரயில் கிளம்பியதும், அடுத்த
நிலையத்திற்கு முன் கழிவறை
அருகே அந்த மொபைலை
வைத்து விட்டு இறங்கி விட
வேண்டும்.
டைமர்
அமைக்கப்பட்டிருந்ததால்
அடுத்த சிறிது நேரத்தில்
பெரிய விபத்து ஏற்படும்.

ஆனால், ஒரு சாதாரண
திருடன், ஒரு கண நேரப்
பேராசையில் அவன்
திட்டத்தையே கெடுத்து
விட்டான்.
ரயில் முழுவதும் சிரிப்பும்
சலசலப்பும் தொடர்ந்தது.
யாருக்கும் எதுவும் தெரியாது.
ஒரு பெரிய விபத்து ஒரு சிறிய
குற்றத்தால் தவிர்க்கப்பட்டது
என்பதை யாரும்
அறியவில்லை.
ஜன்னலருகே அமர்ந்தவன்
மெதுவாக சிரிக்க முயன்றான்.

மொபைல் திருடன் ஒரு
குற்றவாளி தான். ஆனால்
அவன்தான்,
தன்னுயிர் தந்து
நூற்றுக்கணக்கான
உயிர்களை
காப்பாற்றிய
அறியாமை வீரன்.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# காலம் மறந்த பொக்கிஷங்கள் !!

▪A.s.Govinda rajan

## கோலி குண்டு..!



ஒவ்வொரு குழந்தைகளும் அவர்களின் ரசனைக்கேற்பவும், அவரது உடல்நிலைக்கேற்பவும் சிலவிளையாட்டுகள் பிடிக்கும். சில விளையாட்டுகள் பிடிக்காது. கிராமப்புறங்களில் பல வகையில் சிறுவர்கள் மட்டும் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று தான் கோலிக்குண்டு.

எத்தனை பேர் விளையாடலாம்?
இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் விளையாடலாம்.

விளையாட தேவையானது?
கோலிக்குண்டு.

**எப்படி விளையாடுவது?**

கோலிக்குண்டு விளையாட்டுகளை இரண்டு வகையில் விளையாடலாம். அவை வட்டத்தினுள் கோலிக்குண்டை வைத்து விளையாடுவது, மற்றொன்று குழியைத் தோண்டி அதனுள் கோலியைப் போட்டு விளையாடுவதாகும்.

குழியினுள் கோலி குண்டை போடும் முறையில் விளையாடும்போது குண்டு தங்கும் ஆழத்திற்கு குழி அமைத்துக்கொள்ள வேண்டும். விளையாடும் நபர்கள் அனைவரும் குழியை நோக்கி கோலிக்குண்டுகளை வீச வேண்டும். இவ்வாறு வீசி முடித்த பின்பு எந்த கோலிக்குண்டு குழியில் அல்லது அதற்கு அருகில் விழுந்ததோ அவர்கள்தான் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படுவார். பிறகு அவர் விளையாட்டைத் தொடரலாம். குழியின் மேற்புறத்தின் ஓரமாகக் கட்டை விரலை ஊன்றி, சுற்றியிருக்கும் கோலிகளைத் தனது கோலியால் குறி பார்த்து அடிக்க வேண்டும்.

**வட்டத்திலிருந்து வெளியே தள்ளும் முறை :**

வட்டத்திலிருந்து ஐந்து அல்லது ஆறு அடி தள்ளி கோடு இட வேண்டும். விளையாடும் நபர் அனைவரும் அந்தக்கோட்டிலிருந்து கோலிக்குண்டுகளை தூக்கி எறிய வேண்டும். முதலில் எறிந்தவன் வட்டத்தில் உள்ள கோலி அடிக்கும்போது எத்தனை கோலிக்குண்டுகள் வெளிவருகிறதோ அந்த கோலிக்குண்டுகள் அனைத்தும் அவனுக்கே சொந்தம். இவ்வாறு அனைத்து கோலிக்குண்டுகள் தீரும் வரை விளையாடுவார்கள்.

இந்த விளையாட்டில் வெற்றிப் பெற்றவர்கள் தோற்றவரின் கோலிக்குண்டுகளை எடுத்துச் செல்லலாம். மற்ற வகை ஆட்டத்தில், கோலி அடிப்பவர்கள், மற்றவர்கள் கூறும் கோலிகளை அடிக்க வேண்டும். அவ்வாறு அடித்தால், கோலிகளை பெறுவார்.

**குண்டை அடிக்கும் முறை :**

கட்டைவிரலை நிலத்தில் ஊன்றி, நடுவிரல் அல்லது ஆட்காட்டி விரலின் விசையால் கோலிக்குண்டை அடிக்க வேண்டும்.

**பயன்கள் :**

✶விரல்கள் வலுப்பெறும்.
✶கூர்மையான கண்பார்வை கிடைக்கும்.
✶சேமிக்கும் குணம் வளரும்.




சிவன் முதன் முதலில் கால் பதித்த பூமி சிவபெருமானின் உண்மையான சொந்த ஊர்!

சிவன் முதன் முதலில் கால் பதித்த பூமி சிவபெருமானின் உண்மையான சொந்த ஊர்! பொதுவாக சிவபெருமானின் இருப்பிடமாக நாம் அறிந்திருப்பது கைலாசம். ஆனால் புராணங்கள் கூறும் இன்னொரு ஆச்சரியமான உண்மை என்ன தெரியுமா? உலகில் சிவபெருமான் முதன்முதலில் தோன்றிய தலம் கைலாசம் அல்ல! அது தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள புனித ஸ்தலம் உத்தரகோசமங்கை.

### சிவனின் ஆதித் தலம் உத்தரகோசமங்கை

தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தில், ராமநாதபுரத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்த பண்டைய சிவஸ்தலம்.

இந்த ஆலயம் சுமார் 3000 ஆண்டுகள் பழமையானது என புராணங்களும், வரலாற்று சான்றுகளும் தெரிவிக்கின்றன.

புராணக் குறிப்புகளின்படி,

சிவபெருமான் முதன்முதலில் பூமியில் கால் பதித்த இடம் இதுவே.
பார்வதி தேவிக்கு வேத ரகசியங்களை உபதேசம் செய்த புனித தலமும் இதுவே.
அதனால் இந்த ஊருக்கு "உத்தரகோசமங்கை" என்ற பெயர் வந்தது.

### பெயரின் அர்த்தம்

உத்திரம் ரகசியம்
கோசம் உபதேசம்
மங்கை பெண் (பார்வதி தேவி)
அதாவது, "சிவபெருமான் பார்வதிக்கு வேத ரகசியங்களை உபதேசம் செய்த இடம்" என்பதே உத்தரகோசமங்கையின் முழு பொருள்.

### உலகப் புகழ்பெற்ற மரகத நடராஜர்

இந்த கோவிலின் மிகப்பெரிய சிறப்பு உலகிலேயே அபூர்வமான மரகத நடராஜர்!
ஆறடி உயரம் கொண்ட பச்சை மரகத கல்லால் செய்யப்பட்ட நடராஜர் இங்கு உள்ளார்.
உலகிலேயே மிகப்பெரிய மரகத நடராஜர் திருவுருவம் இதுவே.
ஆண்டு முழுவதும் சந்தன காப்பு
இந்த மரகத நடராஜர் ஆண்டு முழுவதும் சந்தன காப்பால் மூடப்பட்டிருப்பார்.
மார்கழி மாதம் திருவாதிரை நாளில் மட்டும் அந்த சந்தன காப்பு களையப்பட்டு, மரகத நடராஜர் தனது இயல்பான பச்சை நிறத்தில் அருள்பாலிப்பார்.
அந்த நாளே ஆருத்ரா தரிசனம்!
அன்று லட்சக்கணக்கான பக்தர்கள் இந்த தலத்தில் கூடுவர்.

### கோவிலின் ஆன்மிகப் பெருமைகள்

மூலவர் மங்களேஸ்வரர்
அம்பாள் மங்களேஸ்வரி
இந்த ஆலயம் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது.
இக்கோவில்,
சிவபுரம்
தட்சிண கைலாசம்
பிரம்மபுரம்
மங்களகிரி
ஆதி சிதம்பரம்
என்ற பல புனிதப் பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

### ஆயிரம் லிங்கங்களை கொண்ட சகஸ்ர லிங்கம்

இந்த கோவிலில் உள்ள இன்னொரு அபூர்வம் ஆயிரம் லிங்கங்களை ஒரே திருமேனியில் கொண்ட சகஸ்ர லிங்கம்!

இது இந்தியாவில் மிக அரிய சிவ வடிவங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

### திருவிளையாடல் நடந்த புனித பூமி

திருவிளையாடல் புராணத்தில் கூறப்படும் "வலை வீசி மீன் பிடித்த படலம்" இந்த உத்தரகோசமங்கையில் தான் நடைபெற்றதாக நம்பப்படுகிறது.

### வரலாற்றுச் சிறப்புகள்

பாண்டிய மன்னர்கள் இந்த ஆலயத்தை திருப்பணி செய்து பாதுகாத்தனர்.
சில காலம் பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும் உத்தரகோசமங்கை விளங்கியது.
இன்றும் இந்த கோவில் ராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானத்தின் கீழ் பராமரிக்கப்படுகிறது.

### பல மகான்கள் வழிபட்ட தலம்

இந்த புனித ஸ்தலத்தில் வழிபட்டு அருள் பெற்ற மகான்கள்:
வேத வியாசர்
காகபுஜண்டர்
வானாசுரன்
மயன்
மாணிக்கவாசகர்
அருணகிரிநாதர்
காரைக்கால் அம்மையார்
அத்துடன்,
ராவணன் மண்டோதரி தம்பதிகள் இங்கு குழந்தை வரம் வேண்டி தவம் இருந்ததாகவும் புராணம் கூறுகிறது.

### அபூர்வ வழிபாட்டு அம்சங்கள்

இங்கு தாழம்பூ வைத்து சிவபெருமானுக்கு பூஜை செய்யப்படுகிறது.
இந்த தலத்தில் தாழம்பூ வைத்து வழிபட்டால் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.
இங்குள்ள வராகியை வழிபட்டால் தீராத பிரச்சினைகள் தீரும்.
முருகனுக்கு வாகனமாக யானை இருப்பது இத்தலத்தின் இன்னொரு விசேஷம்.
இந்திரன் தன் ஐராவத யானையை இத்தலத்திற்கு வழங்கியதாக கூறப்படுகிறது.

### அதிசயமான தீர்த்தம்

கோவில் குளத்தில் வாழும் மீன்கள் கடல் நீரில் வாழும் மீன்கள் என்பதும் ஒரு அதிசயம்!
தல விருட்சம் இலந்தை மரம்
தீர்த்தம் அக்னி தீர்த்தம்

### வரலாற்றுப் பாதுகாப்பு

மரகத நடராஜரை கொள்ளையடிக்க அலாவுதீன் கில்ஜி முயன்றபோது, அவர் முயற்சி தோல்வியடைந்ததாக வரலாறு கூறுகிறது.

### முக்கிய திருவிழாக்கள்

இந்த ஆலயத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள்:
சித்திரை திருக்கல்யாணம்
வைகாசி வசந்த உற்சவம்
ஆனி 10 நாள் திருவிழா
மார்கழி திருவாதிரை
மகா சிவராத்திரி
இதில் மிக முக்கியமானது ஆருத்ரா தரிசனம்!
மரகத நடராஜரின் சந்தன மகிமை
ஆருத்ரா தரிசன நாளில் களையப்படும் சந்தனத்தை, வெந்நீரில் கரைத்து பருகினால், தீராத நோய்களும் குணமாகும் என்பது பக்தர்களின் ஆழ்ந்த நம்பிக்கை.

### முடிவுரை

கைலாசம் சிவனின் தெய்வீக வாசஸ்தலம் என்றாலும், பூமியில் சிவபெருமான் முதன்முதலில் தோன்றிய இடமாகக் கருதப்படுவது இந்த உத்தரகோசமங்கைதான்!
அதனால் தான் இது, "சிவனின் உண்மையான சொந்த ஊர்" என போற்றப்படுகிறது.



எழுத்தாளர்
-அலமேலு ரங்கராஜன்
ஸ்ரீவில்லிப்புத்தூர்

---

தினம் ஒரு தலைவர்கள்

# அப்பாஸ் தியாப்ஜி வரலாறு

அப்பாஸ் தியாப்ஜி (1 பிப்ரவரி 1854 – 9 ஜூன் 1936) குஜராத்தைச் சேர்ந்த இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும் மகாத்மா காந்தியின் கூட்டாளியுமாவார். பரோடா மாநிலத்தின் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார். இடதுசாரி வரலாற்றாசிரியர் இவரது இர்பன் அபீப் பேரனாவார்.
குடும்பமும் பின்னணியும்
அப்பாஸ் தியாப்ஜி, குசராத்திலுள்ள காம்பேயில் சுலைமானி போக்ரா அரபு குடும்பத்தில் பிறந்தார். இவர் சம்சுதீன் தியாப்ஜினுமாவார். இவரது தந்தையின் அண்ணன் பத்ருதீன் தியாப்ஜி பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், இந்திய தேசிய காங்கிரசின் ஆரம்பகால தலைவராகவும் இருந்தார். பிறகு பாரிஸ்டர் ஆன முதல் இந்தியர் இவர்தான்



### ஆரம்ப கால வாழ்க்கை

அப்பாஸ் தியாப்ஜி, பரோடா மாநிலத்தில் பிறந்தார். அங்கு இவரது தந்தை கெய்க்வாட் மகாராஜாவின் சேவையில் இருந்தார். இங்கிலாந்தில் படித்த இவர், அங்கு பதினொரு ஆண்டுகள் வாழ்ந்தார். பறவையியல் நிபுணர் சாலிம் அலி இவரது மருமகன்.
ஒரு நீதிபதியாக அவரது முழுமையான நேர்மை மற்றும் நேர்மை ஆகியவை இடதுசாரி காங்கிரஸ்காரர்கள் மற்றும் பிரித்தானிய எதிர்ப்பு தீவிரவாதிகளால் கூட பரவலாக அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்பட்டன.
இங்கிலாந்தில் படித்த பாரிஸ்டர் என்ற முறையில், தியாப்ஜிக்கு பரோடா மாநில நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக வேலை கிடைத்தது. இவரது வாழ்க்கை முழுவதும், பரோடா மன்னனின் உறுதியான விசுவாசியாக இருந்தார்.

மேற்கத்திய முறைப்படி தன் குழந்தைகளை வளர்த்து, தன் குழந்தைகளை உயர்கல்விக்காக இங்கிலாந்துக்கு அனுப்பி, காலப்போக்கில் நீதித்துறையில் உயர்ந்து பரோடா மாநில உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகி ஓய்வு பெற்றார்.

பெண்களின் கல்வி மற்றும் சமூக சீர்திருத்தத்தை ஆதரித்தார். பெண்களின் உரிமைகளுக்கான ஆரம்பகால ஆதரவாளராக இருந்தார். பர்தா கட்டுப்பாடுகளை புறக்கணித்து, தனது மகள்களை பள்ளிக்கு அனுப்பியதன் மூலம் இவர் காலத்தின் நடைமுறையில் இருந்த வழக்கத்தை உடைத்தார். இவரது மகள் சோகைலா, புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் இர்பான் அபீப்பின் தாயார் ஆவார்.

### இந்திய சுதந்திர இயக்கம்

1917 இல் கோத்ராவில் நடைபெற்ற சமூக மாநாட்டில் மகாத்மா காந்தியுடன் அப்பாஸ் தியாப்ஜி கலந்து கொண்டார். அந்த நேரத்தில், இவர் ஒரு மேற்கத்திய வாழ்க்கை முறையை வழிநடத்தி, பழுதடையாத வகையில் வடிவமைக்கப்பட்ட ஆங்கில உடைகளை அணிந்து, பிரித்தானிய மாதிரியாகக் காணப்பட்டார். 1919 இல் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு, இந்திய தேசிய காங்கிரசால் ஒரு சுயாதீன உண்மை கண்டறியும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டபோது அது அனைத்தும் மாறியது. ரெசினால்டு டையர் செய்த அட்டூழியங்களை நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களை இவர் குறுக்கு விசாரணை செய்தார். இந்த அனுபவம் இவரை காந்தியை பின்பற்றுபவராக்கியது. தனது மேற்கத்திய பாணி பிரபுத்துவ வாழ்க்கையை விட்டுவிட்டு, காந்தி இயக்கத்தின் பல சின்னங்களை ஏற்றுக்கொண்டார். ஆங்கில ஆடைகளை எரித்து, காதி நூற்று அதையே அணிந்தார். மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் நாடு முழுவதும் பயணம் செய்தார், எளிய தர்மசாலைகள் மற்றும் ஆசிரமங்களில் தங்கி. தரையில் தூங்கினார். மேலும், பிரித்தானிய இந்திய அரசாங்கத்திற்கு எதிராக சத்தியாகிரகத்தை பிரசங்கித்து பல மைல்கள் நடந்து சென்றார். தன்னுடைய எழுபது வயதைக் கடந்தும் இந்தப் புதிய வாழ்க்கை முறையைத் தொடர்ந்தார். பல ஆண்டுகள் பிரித்தானிய சிறைகளில் இருந்தார். 1928 இல், இவர் சர்தார் வல்லபாய் படேலை பர்தோலி சத்தியாகிரகத்தில் ஆதரித்தார். இதில் பிரித்தானிய துணி மற்றும் பொருட்களைப் புறக்கணித்தார். தியாப்ஜியின் மகள் சோகைலா இவ்வாறு கூறுகிறார். "குடும்பத்தின் வெளிநாட்டு ஆடைகளுடன் ஒரு காளை வண்டியில் ஏற்றியது நினைவுக்கு வந்தது. அதில் தன் தாயின் "சிறந்த ஐரிஷ் துணி, படுக்கை விரிப்புகள், மேஜை கவர்கள்...", தனது தந்தையின் "அங்கர்கா, சௌகாஸ் மற்றும் ஆங்கில உடைகள்", தனது சொந்த உடைகள் "பிடித்த பட்டு மற்றும் வெல்வெட் தொப்பிகள்" அனைத்தும் ஏற்றப்பட்டு எரிக்க கொடுக்கப்பட்டது.



### உப்பு சத்தியாகிரகம்

1930 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இந்திய தேசிய காங்கிரசு முழு தன்னாட்சி சாற்றல் அல்லது பிரித்தானிய இராச்சியத்திலிருந்து சுதந்திரத்தை அறிவித்தது. சட்ட மறுப்பு அல்லது சத்தியாகிரகத்தின் முதல் செயலாக, மகாத்மா காந்தி பிரித்தானிய உப்பு வரிக்கு எதிராக நாடு தழுவிய வன்முறையற்ற போராட்டத்தைத் தேர்ந்தெடுத்தார். காந்தி விரைவில் கைது செய்யப்படுவார் என்று காங்கிரசு அதிகாரிகள் நம்பினர். மேலும் காந்தி கைது செய்யப்பட்டால் உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமை தாங்க காந்தியின் உடனடி வாரிசாக தியாப்ஜியைத் தேர்ந்தெடுத்தனர். 1930 ஆம் ஆண்டு மே 4 ஆம் தேதி, தண்டிக்கு உப்பு அணிவகுப்புக்குப் பிறகு, காந்தி கைது செய்யப்பட்டார். மேலும், குசராத்தில் உள்ள தாராசனா உப்பளங்களில் நடந்த உப்பு சத்தியாக்கிரகத்தின் அடுத்த கட்ட சோதனைக்கு தியாப்ஜி பொறுப்பேற்றார்.

7 மே 1930 அன்று, தியாப்ஜி தாரசானா சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். சத்தியாக்கிரகிகளின் கூட்டத்தில் உரையாற்றினார், மேலும் காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி இவருடன் இணைந்து அணிவகுத்து நின்றார். மே 12 அன்று, தாராசானாவை அடைவதற்கு முன்பு, தியாப்ஜி மற்றும் 58 சத்தியாக்கிரகிகள் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டனர். அந்த நேரத்தில், சரோஜினி நாயுடு, சத்தியாகிரகத்தை வழிநடத்த நியமிக்கப்பட்டார். இது இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் மீதான உலக கவனத்தை ஈர்த்தது.
காந்தியின் கைதுக்குப் பிறகு மே 1930 இல் உப்பு சத்தியாகிரகத்தின் தலைவராக அவருக்குப் பதிலாக எழுபத்தாறு வயதில் தியாப்ஜியை மகாத்மா காந்தி நியமித்தார். தியாப்ஜி விரைவில் பிரித்தானிய இந்திய அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். காந்தியும் மற்றவர்களும் தியாப்ஜியை "குசராத்தின் பெரிய முதியவர்" என்று மரியாதையுடன் அழைத்தனர்.

### இறப்பு

அப்பாஸ் தியாப்ஜி 9 ஜூன் 1936 அன்று முசோரியில் (இப்போது உத்தராகண்டில் உள்ளது) இறந்தார். இவரது மரணத்திற்குப் பிறகு, காந்தி ஹரிஜன் செய்தித்தாளில் "ஜி. ஓ. எம். ஆஃப் குஜராத்" (குஜராத்தின் கிராண்ட் ஓல்ட் மேன்) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்.

# ‘தாய்கிழவி’ திரைப்படத்தின் புதிய ரிலீஸ் தேதி அறிவிப்பு






75 வயது மூதாட்டியாக முக்கிய கதாபாத்திரத்தில் ராதிகா நடித்துள்ளார்.

இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார்.

சிவகார்த்திகேயன் தயாரிப்பில் ராதிகா நடித்துள்ள புதிய படம் 'தாய் கிழவி'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார்.

நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ளார். இதில் சிங்கம் புலி, அருள்தாஸ், பாலசரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

உசிலம்பட்டி கிராமத்தில் உள்ள காடுபட்டியில் வாழும் 75 வயது மூதாட்டி மற்றும் அவரது குடும்பத்தை மையமாக கொண்டு இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த படத்தில் 75 வயது மூதாட்டியாக முக்கிய கதாபாத்திரத்தில் ராதிகா நடித்துள்ளார். இதனை தொடர்ந்து இப்படத்தின் டீசர் சில வாரங்களுக்கு முன் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. டீசர் முழுவதும் நடிகை ராதிகா வயதான கெட்டப்பில் வந்து அடாவது செய்யும் காட்சிகள் இடம்பெற்று இருந்தன.

இதனிடையே, 'தாய் கிழவி' பிப்ரவரி 20-ந்தேதி திரையரங்குகளில் வெளியாகும் படக்குழு தெரிவித்து இருந்தது. இந்நிலையில், தாய் கிழவி படம் பிப்ரவரி 27 ஆம் தேதி வெளியாகும் என்று புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.



நடிகை ப்ரீத்தி முகுந்தன் வேகமாக வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர். அவர் சமீபத்தில் சர்வம் மாயா என்ற மலையாள படத்தில் நடித்து இருந்தார்.

அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்த நிலையில் ப்ரீத்திக்கு பாராட்டுகளும் வந்தது. இவர் தான் ஹீரோவுக்கு ஜோடியாக நடித்து இருந்தாலும், படத்தில் பேயாக நடித்த பெண்ணுக்கு இன்னும் அதிகம் பாராட்டுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

அடுத்து அதர்வா ஜோடியாக இதயம் முரளி படத்தில் அவர் நடித்து இருக்கிறார்.

# ‘சரஸ்வதி’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியானது!




நடிகர் சரத்குமாரின் மகள் என்ற அடையாளத்துடன் தமிழ் சினிமாவில் அடியெடுத்து வைத்து தனக்கென ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியவர் நடிகை வரலட்சுமி சரத்குமார்.

'போடா போடி' படத்தின் மூலம் அறிமுகமான இவரது நடிப்பில் தாரை தப்பட்டை, சர்கார், விக்ரம் வேதா, சத்யா, சண்டக்கோழி 2 ஆகிய படங்கள் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றவை.

தெலுங்கு மற்றும் கன்னட படங்களிலும் நடித்து உள்ளார். விஜய்யின் கடைசி படமான 'ஜனநாயகன்' படத்தில் நடித்துள்ளார்.

இதனிடையே, மும்பையை சேர்ந்த தொழிலதிபரான நிக்கோலஸ் சச்தேவ் என்பவரை காதலித்து பெற்றோர்கள் சம்மதத்துடன் கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இதன்பின் சினிமாவில் பெரிய அளவில் தலைகாட்டாமல் இருந்து வந்தார்.

இந்த நிலையில், நடிகை வரலட்சுமி, தன் சகோதரி பூஜாவுடன் இணைந்து 'தோசா டைரீஸ்' என்ற புதிய தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார்.

இந்நிறுவனத்தின் முதற்படமான 'சரஸ்வதி' மூலம் இயக்குநராகவும் வரலட்சுமி அறிமுகமாகிறார். இப்படத்தில் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, நவீன் சந்திரா உள்பட பலர் நடிக்கின்றனர். தமன் இப்படத்திற்கு இசையமைக்கிறார். படத்தின் படப்பிடிப்பு கடந்த மாதம் நிறைவடைந்தது.இந்நிலையில், 'சரஸ்வதி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகியுள்ளது.

# ‘யூத்’ படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு!



நடிகர் கருணாஸின் மகன் கென் கருணாஸ். இவர் 'அம்பாசமுத்திரம் அம்பானி', 'நெடுஞ்சாலை' படங்களின் மூலம் குழந்தை நட்சத்திரமாக தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார்.

இதனை தொடர்ந்து 'அசுரன்', 'விடுதலை-2' ஆகிய படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். இதற்கிடையே, நடிகர் தனுஷின் 'திருச்சிற்றம்பலம்' படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றி உள்ளார்.

தொடர்ந்து, கென் கருணாஸ் இயக்கி வந்த முதல் படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது.

கென் கருணாஸ் இயக்கி கதாநாயகனாக நடித்துள்ள படத்தை பார்வதா என்டர்டெயின்மென்ட் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு யூத் என பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சிறை படம் மூலம் பாராட்டுகளை அனிஷ்மா மற்றும் மீனாட்சி தினேஷ், பிரியன்ஷி யாதவ் கதநாயகைகளாகவும், சுராஜ் வெஞ்சரமூடு முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

அண்மையில், இப்படத்தின் டீசர் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், 'யூத்' திரைப்படம் மார்ச் 19ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.



பாலிவுட் திரையுலகில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவராக இருப்பவர் வாணி கபூர். ஹிந்தியில் தொடர்ந்து படங்கள் நடித்து வரும் இவர் தமிழில் வெளிவந்த ஆஹா கல்யாணம் என்கிற படத்தில் நடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை வாணி கபூர், அடிக்கடி தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்வார். அந்த வகையில் தற்போது கருப்பு நிற உடையில் எடுத்துக்கொண்ட கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# கமல்ஹாசனின் ராஜ்கமல் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் அடுத்த படத்தின் அப்டேட்




ரஜினி-கமல் இணைந்து புதிய படத்தில் நடிக்கவுள்ளனர். கமல் தயாரிப்பில் ரஜினி தனது 173-வது படத்தில் நடிக்க இருக்கிறார். இந்த படத்தை டான் பட இயக்குநரான சிபி சக்கரவர்த்தி இயக்க இருக்கிறார்.

இதையடுத்து ரஜினி-கமல் இணைந்து நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், கமல்ஹாசனின் ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்னேஷனல் தயாரிப்பு நிறுவனத்தின் அடுத்த படம் குறித்த அறிவிப்பு நாளை மாலை 6.01 மணிக்கு வெளியாகும் என பட தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# விக்னேஷ் சிவன் - நயன்தாரா தம்பதியின் காதலர் தின க்ளிக்ஸ்!



நயன்தாரா-விக்னேஷ் சிவன் இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டனர்.
இந்த தம்பதிக்கு உயிர், உலக் என்று இரட்டை ஆண் குழந்தைகள் உள்ளனர்
பிப்ரவரி 14 ஆம் தேதியான இன்று காதலர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
இந்நிலையில், காதலர் தினத்தை முன்னிட்டு விக்னேஷ் சிவன் - நயன்தாரா தம்பதி புகைப்படங்கள் வெளியிட்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
நயன்தாரா-விக்னேஷ் சிவன் இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டனர். இந்த தம்பதிக்கு உயிர், உலக் என்று இரட்டை ஆண் குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மை லார்ட் படக்குழுவை நேரில் அழைத்து பாராட்டிய சூர்யா




மை லார்ட் திரைப்படம் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியாகி இருக்கிறது.
மை லார்ட் படத்தில் சைத்ரா கதாநாயகியாக நடித்துள்ளார்.
தமிழ் திரையுலகில் இயக்குநர், நடிகர் என பன்முகத்தன்மை கொண்டவர் சசிகுமார். கடந்த சில ஆண்டுகளாக நடிப்பில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறார். இவர் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான "டூரிஸ்ட் ஃபேமிலி" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வெற்றி படமாக மாறியது.
இந்த வரிசையில், நடிகர் சசிகுமார் நடிப்பில் உருவாகி இருக்கும் "மை லார்ட்" திரைப்படம் நேற்று (பிப். 13) வெளியானது. இயக்குநர் ராஜுமுருகன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்தப் படத்தில் சைத்ரா கதாநாயகியாக நடித்துள்ளார். ஷான் ரோல்டன் இசையமைத்திருக்கும் இந்த திரைப்படம் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியாகி இருக்கிறது.
இந்நிலையில், 'MY LORD' படம் நல்ல வரவேற்பைப் பெற்று வருவதை ஒட்டி அப்படத்தின் விநியோகஸ்தரான நடிகர் சூர்யா படக்குழுவை நேரில் அழைத்து பாராட்டியுள்ளார். இது தொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

# என் அம்மாவுக்கு மறுமணம் செய்துவைக்க விரும்புகிறேன்



சுரேகா வாணிக்கு தற்போது 48 வயதாகிறது
சுரேகா வாணி கணவர் ஏற்கனவே மரணம் அடைந்துவிட்டார்.
பிரபல குணசித்திர நடிகை சுரேகா வாணி. இவர் தமிழில் உத்தமபுத்திரன், தெய்வத்திருமகள், ஜில்லா, பிரம்மா, எதிர்நீச்சல், மெர்சல், விஸ்வாசம், மாஸ்டர் உள்பட பல படங்களில் நடித்து இருக்கிறார்.
சுரேகா வாணி கணவர் ஏற்கனவே மரணம் அடைந்துவிட்டார். இவருக்கு ஒரு மகள் உள்ளார். தற்போது 48 வயதாகும் சுரேகா வாணி இரண்டாம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவரது மகள் சுப்ரிதா தெரிவித்துள்ளார்.
தன் அம்மாவுக்கு மறுமணம் செய்துவைக்க விரும்புவது குறித்து சமீபத்திய பேட்டியில் பேசிய சுரேகா வாணியின் மகள் சுப்ரிதா, "என்னுடைய திருமணம் நடக்கும் முன்னர், என் அம்மாவுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். என் சொந்தக்காரர்களிடம் கூட இதை பற்றி பேசிவிட்டேன்; அவர்களுக்கும் இதில் சம்மதமே.
அம்மாவை மிக அன்பாக பார்த்துக் கொள்ள வேண்டும். அவரின் விருப்பங்களை மதிக்க வேண்டும். அப்படியான ஒருவர்தான் அம்மாவுக்கு சரியாக இருப்பார். ஆனால், இது என்னுடைய முடிவு மட்டுமில்லையே, அவருடைய விருப்பமும் மகிழ்ச்சியும் தான் பிரதானம். என் அப்பா இடத்தை வேறு யாருக்கும் தரக் கூடாது என அவர் நினைக்கிறார்; அதை நானும் மதிக்கிறேன்" என்று தெரிவித்தார்.



நடிகை யாஷிகா ஆனந்த் தொடர்ந்து தாராள கவர்ச்சி போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.
அவரது கவர்ச்சி போட்டோ வீடியோக்களுக்கு என்றே பெரிய ரசிகர் கூட்டமும் இருக்கிறது. தற்போது யாஷிகா உச்சகட்ட கவர்ச்சியில் போஸ் கொடுத்து சில புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.
நாளுக்கு நாள் அவர் கவர்ச்சியில் எல்லைமீறி வருவதாக ரசிகர்கள் கமெண்ட்டில் விமர்சிக்கவும் தொடங்கி இருக்கின்றனர்.

# நான் பார்த்த பெண்ணை... நீ பார்க்கவில்லை... பிரபு தேவா - வடிவேலுவின் காதலர் தின வாழ்த்து!



பிரபுதேவா, வடிவேலு கூட்டணியில் 'BANG BANG' என்ற படம் தயாராகி வருகிறது.
காதலர் தினத்தை முன்னிட்டு பிரபு தேவா வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.
நடிகர்கள் பிரபுதேவா, வடிவேலு கூட்டணியில்'BANG BANG' என்ற படம் தயாராகி வருகிறது. இந்த படத்தை சாம் ரோட்ரிகஸ் இயக்க, யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.
காதலன், மனதை திருடிவிட்டாய், ராசைய்யா, மிஸ்டர் ரோமியோ, லவ் பேர்ட்ஸ் மற்றும் எங்கள் அண்ணா போன்ற படங்களின் மூலம் 90ஸ்களில் ரசிகர்களை மகிழ்வித்த இந்த காமெடி கெமிஸ்ட்ரி கூட்டணி தற்போது மீண்டும் இணைந்துள்ளது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
இந்நிலையில், காதலர் தினத்தை முன்னிட்டு பிரபு தேவா வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், பிரபு தேவா மற்றும் வடிவேலு ஆகியோர் "நான் பார்த்த பெண்ணை.. நீ பார்க்கவில்லை.." என்று பாடல் பாடி வைப் செய்துள்ளனர்.

# லோகேஷ் கனகராஜ் நடிக்கும் 'DC' படத்தின் க்ளிம்ப்ஸ் வீடியோ வெளியீடு




முன்னணி நடிகர்களை வைத்து படம் இயக்கி, தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குநராக வலம்வருபவர் இயக்குநர் லோகேஷ் கனகராஜ். நடிகை ஸ்ருதிஹாசனுடன் ஆல்பம் பாடல் ஒன்றில் நடித்திருந்தார். அதனைத்தொடர்ந்து தற்போது இயக்குநர் அருண் மாதேஷ்வரன் இயக்கத்தில் டிசி படத்தின்மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.
இப்படம் முழு ஆக்ஷன் படமாக உருவாக உள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்தில் லோகேஷ் கனகராஜிற்கு ஜோடியாக முன்னணி பாலிவுட் நடிகையான வாமிகா கபி நடிக்கிறார். அனிருத் ரவிச்சந்திரன் படத்திற்கு இசையமைக்கிறார். சன் பிக்சர்ஸ் நிறுவனம் படத்தை தயாரிக்கிறது.
இந்நிலையில் இப்படத்தின் க்ளிம்ப்ஸ் வீடியோ காதலர் தினத்தை முன்னிட்டு இன்று வெளியாகியுள்ளது. அந்த வீடியோவில் லோகேஷ் கனகராஜ், வமிகா கேபி, சஞ்சனா உள்ளிட்டோரின் கதாபாத்திரங்களை படக்குழு அறிமுகம் செய்ததுள்ளது.

# ஸ்வீட்டி நாட்டி கிரேசி திரைவிமர்சனம்



அருணகிரியின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம்.
நாயகன் த்ரிகுண் மற்றும் நாயகி ஸ்ரீ ஜீத்தா கோஷ் ஒரே கல்லூரியில் படிக்கிறார்கள். நட்பாக தொடங்கும் உறவு, வழக்கமான காதல் பாதையில் நகர்கிறது. காதல் வலுப்பெறும் நிலையில், நாயகன் தனது கடந்தகால அனுபவங்களை வெளிப்படையாக நாயகி ஸ்ரீ ஜீத்தாவிடம் பகிர்கிறார்.
அதனைத் தொடர்ந்து இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது. திருமணத்திற்குப் பிறகு, கோத்தகிரியில் அமைந்துள்ள நாயகியின் வீட்டிற்கு செல்கிறார். அங்கு நாயகனுக்கு புதிய பிரச்சனை ஏற்படுகிறது. இறுதியில் த்ரிகுண், ஸ்ரீஜீத்தா திருமண வாழ்க்கை எப்படி சென்றது? த்ரிகுண்-க்கு வந்த பிரச்சனை என்ன? என்பதே படத்தின் மீதிக்கதை.
படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் த்ரிகுண் தனது கதாபாத்திரத்திற்கு தேவையான உடல்மொழி மற்றும் வசனப் பேச்சில் இயல்பை காட்டுகிறார். பெண்களிடம் மாட்டிக்கொண்டு அவஸ்தை படும் காட்சியில் கவனிக்க வைத்து இருக்கிறார். நாயகி ஸ்ரீ ஜீத்தா கோஷ் கவர்ச்சி மற்றும் உணர்ச்சி இரண்டையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.






வேனல் காலத்தில்
மொட்டை மாடியில்
பறவைகளுக்கு
தண்ணி வைக்கிறாய்..
காதல் வந்த
என்னை மட்டும் ஏன்
தள்ளி வைக்கிறாய் ?!

அத்தனை பேர் சேர்ந்து
இறைத்த வார்த்தைக்



கிணற்றில்
இன்னமும்
மிச்சமிருக்கிறது
உன் காதலும்
என்
வார்த்தைகளும்!

**ரிஷபன்**

1. இளமை தரும்
தைரியத்தை முதுமை
தருவது இல்லைமுதுமை
தரும் பக்குவத்தை
இளமை தருவது இல்லை

2. உலகில் மூன்று விதமான
மனிதர்கள் உண்டு
ரோஷமான ஏழை
மோசமான பணக்காரன்
பாசமான நடுத்தர வர்க்கம்

3. மற்றும் குறை இல்லாத
மனிதன் யாரும் இல்லை
நல்லதும் கெட்டதும் கலந்தது
தான் இந்த உலகம்

4. மௌனம் சில நேரம்
பலவீனம் போல் தெரியும்
ஆனால் அதுதான்
சுயமரியாதையின்
உயர்ந்த வடிவம்

5. ஒரு தாய் பிள்ளைகளை
பெறுவதற்காக அழலாம்
ஆனால் பெற்றதற்காக
அழக்கூடாது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## காதல் செய்வோம்..!

காதல் செய்வோம்
காலமெல்லாம்
நல்லதே நடக்கும்
நாளெல்லாம்.

பெற்றோரைக் காதலி
பெருகும் வாழ்நாள்

உடன்பிறப்புக்களைக் காதலி
ஆதரவு கிடைக்கும்.

நண்பர்களைக் காதலி
நல்லதே நடக்கும்.

உலகைக் காதலி
அனுபவம் கிடைக்கும்.

ஆசிரியரைக் காதலி
நல்ல வழிகாட்டல்
கிடைக்கும்.

படிப்பைக் காதலி
பணிகள் பல கிடைக்கும்.

உழைப்பைக் காதலி
உயர்வு நிச்சயம்.

இயற்கையைக் காதலி
நீண்டநாள் வாழலாம்.

நல்ல உணவைக் காதலி
உடல்நலம் நிச்சயம்.

அத்தனையையும் காதலி
அனைத்தையும் அடையலாம்.

காதல் என்பது இருக்கும்
வரை



கவலை
இல்லை நமக்கு
என்றும்.

**ச.கிறிஸ்து ஞான வள்ளுவன்,**
வேம்பார்.

நான் பெருமைக்கு இத
சொல்லல என்று சொன்ன
பின்னர் சொல்லப்படுபவை
யாவும், யாரோ ஒருவரின்



பெருமைகளைப்
பற்றியே
சொல்லப்படு
கிறது.

**மை எழுத்து கனகராஜ்**
கோயம்புத்தூர்

## உறைபனி

இரவின் இரகசியங்களை
சுமந்த நீலவானில்
விடியலைத் தேடி
மரக்கிளைகளில் மெல்லத்
தங்கும் உறைபனி...

இரவைச் சுமந்த
குளிரின் சின்ன
சின்ன நினைவுகளை
இலைகளின் நுனியில்
முத்தாக உறைபனி...

புல்லின் நுனியில்
வெள்ளி நூலால்
பின்னியது போல்,
காற்றில் கவிதையாக
திளைக்கும் உறைபனி...

உறைபனி... இறைவன்
எழுதிய
இயற்கையின் வெண்கவிதை

**நா.பத்மாவதி,** கொரட்டூர்



கட்டிலில் கரையேறி விட்டு
ஒதுங்கி போன
ஒரு சில காணாமல் போன
காதலர்களை கண்டு விட்டு
காதலெல்லாம் காமம் என
சொல்ல நீ யார்????
காதலெல்லாம்
விபச்சாரமென்றால்
வரதட்சணை வாங்கி
மணம் முடிக்கும் உன் கேடு
கெட்ட பந்தத்துக்கு என்ன
பெயர் சூட்டுவாய்??
மனதுக்கு மதம் பார்க்கும் நீ
உயிர் போகும் நேரத்துக்கு
மனிதனை பார்ப்பது ஏன்???
அவனவன் வாழ்க்கை
அவன் இஷ்டம்–உன்
அறிவுரையெல்லாம் நேர
நஷ்டம் அடுத்தவன்
தோட்டத்துக்கு
வேலி போட தாலியோடு
அலையாதே காதலெல்லாம்
விபச்சாரமென
அபச்சாரமாய் நோட்டீஸ்
ஒட்டி திரியாதே காதல் ஒரு
தினத்தில் கொண்டாடி
முடிவதல்ல காதல் எதுவென்று
முதலில் தெரிந்து கொள்??
மயிர் நரைத்து உதிர்ந்து
உடல் தளர்ந்த போதும்
உயிரில் பேரன்பாய்
புரையோடிக் கிடப்பது
உயிர்க்காதல்!!!
மதம் கடந்து மனிதம் பார்
உன் அகத்தில் பெரு
நதியாய் ஊற்றெடுக்கும்
ஓர் காதல்!!
மனிதன் மனிதனாய்
உயிரோடு வாழ
காதல் ஆக்ஸிஜனாய்
வேண்டும் ஆதலினால் காதல்
செய்வோம்!!
காதல் செய்ய விரும்பு

இதயம் வேண்டும்
இதழ் தந்த முத்தம்
இன்னும் வேண்டுமென்று!

ஒரு அழகான
கவிதை எழுத வேண்டும்?
இதழ்களால் இதழில்!

மிருகமாய் மாறினேன்
காற்றில் பரவும்
உன் மல்லிகைப் பூ
வாசனையால்!

மாங்காய் பத்தையாய்
கடித்து திண்ணவா?
காதல் கொஞ்சும்
உன் கன்னங்களை!



ஆண்டவன் திருஷ்டி
பொட்டுவைத்து
விட்டானா?
உன் கன்னக்குழிகளாய்!!

**லி.நௌஷாத் கான்**



பெண் மலர்ந்த பூ
வாடுமுன்னே வாசத்தை
அனுபவித்தால் சுகம்...
தூர இருந்து பழகினால்
உறவு...ஒட்டி பழகினால்
அது வரவு..
அதை பேனி காப்பதே மரபு...

பணம் காந்தத்தை போன்றது
நம் கையில் இருக்கும்
வரை அனைத்தும்
ஒட்டிக்கொள்ளும்....

பருமையில் வாடினால்
நம்மை மிதித்து
கொல்லும்....

## சீராக பழகு

தெளிந்த நீரைபோல்
குடும்பம் அதை
அள்ளி பருகினால்
இன்பம்அதை குழப்பி
விட்டால்துன்பம்...!



சீராக இருந்து பழகு
அதுவே உன் அழகு....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



## அன்பர்தின வாழ்த்துகள்:

இதயச் சங்கிலி
இணைக்கும் இருவரையும்
உதயம் ஆனதே
உளமாரக் காதல்!
பிணைக்காமல் விட்டாலும்
பிரிவதில்லை நாமே!
இணைந்தே எப்போதும்
இருப்பதாய் உறதிகூறி
கணையாழி அணிவதோ
மங்கலப் பொன்னாண்
துணையாக அணிவதோ
இதைப்போல் தானே!
இணைக்கும் உறவெல்லாம்
இதுபோல் சங்கிலியே!
பிணைக்கும் உறவோ



நூலாய்
இருப்பினும்
அனைத்துக்கும்
அதுதான்
ஆதாரம்
தானே!

**வைரமணி**
சென்னை

## ஆதலினால் காதல் செய்வீர்!

என்னவளே! என் இதயம்
நிறைந்த பேரழகே!

கற்பனைக்கு விருந்தாகி
கனவுகளில் ஊர்வலமானாய்

பருவ வயதில் காதல் வரும்
பாரில் தடையும் தேடி வரும்
சாதி என்னும் போர்வைக்குள்
சாவு மூடி இருக்கும்
அன்பும் அமிலத்தில் தோய்ந்து
அழகு உடல் ரணமாகும்
துளிர்க்கும் தளிரை
வேரோடு சாய்த்து
ஆறாத் துயரம் நேரும்

தாய் தடுக்கும் காதல்
தரணியில் பல உண்டு
உன் புகழில் மயங்கியோ
அன்னையவள் கரம் விட்டு
கன்னி உன் கரம் தந்தாள்

மங்கை அவள் மனமகிழ
மணமாலை நாளெண்ணி
கனவுகளில் உலா வந்து
காலம் பல காத்திருந்தேன்

முதிர் கன்னி.. உன்னை நான்



காதலிக்க முத்தாய்ப்பாய்
அகம் மகிழ்ந்து
மூத்தோரும் வாழ்த்துச்சொல்ல

சாதி கேட்கவில்லை
சாத்திரம் பார்க்கவில்லை
ரொக்கம் கேட்கவில்லை
பொருத்தம் தேடவில்லை

ஆரத்தழுவி அன்பு காட்டி
அகம் மகிழ்வோடு உனை
ஏற்று பழமை தேடி புதுமை
பேசி சந்ததிக்கும்
அறிமுகம் செய்து
சரித்திரத்தில் இடம்
தந்தார்

கற்பனைக்கு விருந்தாகி
கனவுகளில் ஊர்வலமாகி

நினைவுகளில் உலா வந்து
நீக்கமற நீ வந்தாய்
நெஞ்சத்தில் நிறைகின்றாய்
ஆதலினால் காதல் செய்தேன்
அகத்தில் உன்னை
அன்பாய்ச் சுமந்தேன்

என் துன்பம் போக்கி
இன்பம் தந்து என்னுள் கலந்து
என்னை எனக்கு உணர்த்தி
என்னை நீ வாழ வைத்தாய்
வாழ்வின் பொருள் தந்தவளே!
உந்தன் பெயர்தான்
எந்தன் அடையாளம்
அதுதான் என் முகவரி

என் மன வானில்
எழிலாய் உலா வந்து
எங்கும் நிறைந்த
என் அன்னை மொழியாம்
அமுதத் தமிழே!
உன்னை நான் காதலித்தேன்
என்னை நீ கரம் பிடித்தாய்



ஆதலினால் காதல்
செய்வீர் அகிலத்தை
ஆட்சி செய்யும்
அழகு தமிழாம்
அன்னை மொழியை.

**தமிழ்நிலா**

# நூல் விமர்சனம்

புத்தகம்: பேரன்பின் சுகந்தம்
ஆசிரியர் : ("ரைட்டர்ஸ் கேப்" என்னும் புலனக் குழுவின் 20 எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய சிறுகதை தொகுப்பு)
தொகுப்பாசிரியர்:திரு கௌரிசங்கர் பக்கங்கள் ; 195
விலை : ரூ 180
பதிப்பகம் : குவிகம் பதிப்பகம்
புத்தகம் வாங்க
தொடர்பு எண் :
8939604745/ 9791069435




இச்சிறுகதை தொகுப்பு ரைட்டர்ஸ் கேஃப் (Writer's cafe) எனப்படும் புலன குழுவின் 20 எழுத்தாளர்கள் இணைந்து எழுதிய சிறுகதை தொகுப்பு .195 பக்கங்களை கொண்ட இப்புத்தகம் எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவு விறுவிறுப்பாக, சுவாரசியமாக இருக்கிறது .எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் தத்தம்பாணியில் கதைகளை படைத்திருக்கிறார்கள். வெவ்வேறு வித்தியாசமான கதை களம்.. வித்தியாசமான கதை கரு.. என்பதால் படிக்க சுவாரசியமாக இருக்கிறது .

இனி கதைகளைப்பற்றிய ஒரு கழுகு பார்வை ..பேரன்பின் சுகந்தமாய் வீசும் முதல் கதை **சுஸ்ரீ அவர்கள் எழுதிய "கனவு மெய்ப்பட வேண்டும்". நடிகனாக வேண்டும் என்ற கனவு காணும் மகன் அதே கனவில் தோற்றுப் போன தன் தந்தையின் கதையால் தன் கனவை மெய்ப்பிக்கிறான். **மணமாகி குழந்தை இல்லை என்னும் பிரச்சனையால் "மாறிய பாதைகளில் தொடரும் பயணங்கள் " என்னவாயிற்று பயணம்? என்பதை கூறுகிறார் திருமதி சுதா கணபதி. **கள்ளச்சாராயத்தால் அந்த குடும்பம் சந்திக்கும் அவலங்களை புதியதோர் உலகம் செய்வோம்" கதையில் எடுத்துரைக்கிறார் மணிவண்ணன் **பதின் பருவத்து மகன் போதைக்கு அடிமையாவது கண்டு பதறும் பெற்றோர் "எதிர்பாராத"தை கூறுகிறார் திருமதி. கஸ்தூரி குருசாமி. **கல்யாணத்திற்கு மனைவியுடன் செல்லும் அவன் தன் பழைய காதலியை சந்திக்கிறான் என்னவாகிறது என்பதை லலிதா ஷங்கர் அவர்களின் "கோணம்" கதையில் அறியலாம்.

** "சுபாஷ்ும் காந்தியும்" திருமதி அனுராதா ஜெய்சங்கர் கைவண்ணத்தில் வயிறு குலுங்க சிரிக்க வைக்கிறார்கள். **பானுமதி கண்ணன் அவர்களின் பிரேமா அக்கா மனதில் கனம் ஏற்றுகிறாள் . **கல்யாண மாலை கொண்டாடும் வேளை" செல்லம் ஜெரீனா அவர்களின் சிறுகதை. எதிரெதிர் குணம் கொண்ட அக்கா தங்கை மண வாழ்வில் என்ன நடக்கிறது **பாட்டி பேரனின் பாச போராட்டம்.. கொலுசும் ஒரு பாத்திரமாய் .. தி.வள்ளியின் கொலுசு கிண்கிணி. **திருமதி லீலா ராமசாமியின் ஒரு மார்ச்சுவரி மரணம் த்ரில்லர் விரும்பிகளுக்கு செம விருந்து **ஒரு துளிப்பால் திரு சாய் செந்திலின் கருத்துள்ள கதை.. மனிதாபிமானம்.

**திருகௌரிசங்கர் அவர்களின் "அவன்" ஒரு சுவாரசியமானவன் **முனைவர் திருமதி சிவகாமசுந்தரி அவர்களின் "வாராய் என் தோழி" மனதுக்கு நெருக்கமானவள் தாய் மகன் பாசத்தை கூறுபவள் **திருமதி உமா சுவாமிநாதனின் "ஈன்றவள் ஏக்கம்" யதார்த்தமான இனிமை **திருமதி சுஜாதா கிருஷ்ணமூர்த்தியின் "அப்பாவின் ஒருநாள்" ரசிக்க வைக்கிறது **திருமதி சுபாஷினி ரமணனின் விளையாட்டுப் பிள்ளை நம் மடியில்..மனதில் ஏறி அமர்கிறான் **திருமதி சாரதா ஸ்ரீனிவாசனின் அம்மாவின் குரல் காதிலே ஒலிக்கிறது.

**திருமதி வசந்தா கோவிந்தராஜனின் "கடவுளின் தண்டனை" மனம் கனக்க வைக்கிறது **"காவேரி ஓரம் கதை சொன்ன காதல்" திருமதி விஜி ஆர் கிருஷ்ணனின் வித்தியாசமான கோணத்தில்.. **திருமதி விஜி சம்பத் அவர்களின் "பேரன்பின் சுகந்தம்" உறவின் மணம் கதை நெடுக இனிமையாய் மணக்கிறது .



கதைகளை அறிமுகப்படுத்திவிட்டேன் வாசித்து ஒவ்வொரு கதையையும் ரசித்து பேரன்பின் சுகந்தத்தை நுகர உங்களை அன்புடன் அழைக்கிறேன்

**தி.வள்ளி**
திருநெல்வேலி



## கண்ணா...

காலை எழுந்ததுமே
உன் நினைவில்...
வாசல் தாண்டிகால்கள் ஓட...

குழலோசைக் கேட்டவுடன்
மனம் உன்னில் லயிக்க ...

நடையிலே தாளம்
நினைவிலே நீலக்கோலம்
கண்களில் களிப்பு
பார்வையில் பரவசம் ...

சிரிப்பினிலே மாயை
சிந்தையிலுன் சாயை
பெயர் மறந்தேன் உலகம்
மறந்தேன் கண்ணா...

பணம் வேண்டாம்,
புகழ் வேண்டாம்
நீ பார்த்தால்...
மட்டும் போதுமென



சிந்தயந்தியைப்
போல
சிலையாக
நிற்கிறேன்
கண்ணா

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## காதல் வாழ்த்துக்கள்

பிரிவுகள் எப்போதும்
என்னை பாதித்ததில்லை,
அந்த பிரிவில் வரும் உன்
நினைவுகள் தான்
என்னை சிறுகச் சிறுகச்
சிதைக்கின்றன!

மறந்துவிடத் துணிந்துதான்
உன்னை விட்டு
விலகுகிறேன், ஆனால் ஏதோ
ஒன்று மீண்டும் மீண்டும்
என்னை உன்னிடமே
அழைத்துச் சென்று
சேர்க்கிறது!

மாறாத நேசம் பகையும்
வேண்டாம், உறவும்
வேண்டாம், துயரமும்
வேண்டாம் என
தினம் ஆயிரம் முறை
முடிவெடுக்கிறேன்; ஆனால்
எதையும் என்னால்
பின்பற்ற முடியவில்லை!
எங்கெங்கே
ஆரம்பிக்கிறேனோ,
அங்கெல்லாம் உன்னில்தான்
வந்து முடிகிறேன்.
வாடிய பூக்களும்
ஒருகாலத்தில் வாசம்
தந்தவைதான்! நேசித்த
உருவங்கள் மாறலாம்,
ஆனால் உன் மீதான
என் நேசம் என்றும்
மாறுவதில்லை.



காதலை
சுவாசித்தபடி
இப்போதும்
இளமையோடு
இருக்கிறேன்!
எப்போதும்
காதல் மனம்
கொண்டவர்களுக்கு என்
காதல் வாழ்த்துக்கள்!

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி



## கிராமத்து காதல் கவிதை

மையல் கொண்டேன் – உன்
மை விழிகளிலே!
மான் விழியாலே – எனை
மயக்கிட்டாயே – புள்ள!
ரெட்டை ஜடை அழகோ
றெக்க முளைக்க வைக்குதடி
கை வளையல் அழகோ
கிறுக்கு புடிக்க வைக்குதடி!

ஆத்தோரம் குடத்தோடு
அக் கரையில் நிக்கும்
உன்னை ஓரக் கண்ணால
நா பார்க்க உதட்டோரம்
நீ சிரிக்க! தினமும்
காலையில உனை ரசிக்க
திருட்டுத் தனமாய் நா
வாரேன்
தினமும் உனை பார்த்ததும்
திருவிழா கோலம் யெ
மனசுல!

சம்மதனு சொல்லு புள்ள
ஜாதி ஜனத்தை கூட்டிக்கிட்டு
பாக்கு வெத்தல
எடுத்துக்கிட்டு
பரிசம் போட நா வாரேன்!
சமயம் பார்த்து உன்
ஆத்தா கிட்ட சொல்லி
சம்மதம் வாங்கி வாயேன்
சாயங்காலம் வரை நா
காத்துகிடக்கிறேன் புள்ள!

ஏய் புள்ள கேட்டுச்சா
என் பேச்சை நீ கேட்பாய்யா!
சட்டுபுட்டுன்னு நீ சொல்லு
சரின்னு சம்மதம் சொல்லு
காலம் நேரத்தோட
கல்லாணம் பண்ணிகிட்டு
புள்ள குட்டி பெத்துக்கிட்டு
பொறுப்பாய் வாழ்வோம் புள்ள!

மனசு துடிக்குது
பாவி உன்னை தினமும்
நினைச்சி ராவுல படுத்தா
தினமும் ராசாத்தி நீ தான்
என் கனாவுல!

கண்டாங்கி சேலை கட்டிகிட்டு
கெளித்தி மீனை
எடுத்துக்கிட்டு வரப்பு
ஓரம் நீ வார வஞ்சி ஓ
கொள்ளழகு என்னை தூங்க



விடமாட்டுங்குதே!
உன் நெனப்பு என்னை
கிறுக்கு பிடிக்க
வைக்குதடிகிறுக்கு
பிடிக்க வைக்குதடி!

**பா கலைமகள்**
விழுப்புரம்

## காதல் காவியமே..

என்னவளே...
உன் அழகு கண்களுக்கு
கண்ணாடி பிரேம் ஆக
வானவில்லை அழைத்து
வருவேன்

என்னவளே...
ரோஜா பூக்கள் செடியில்
இருப்பதைவிட உன் கூந்தலில்
இருப்பதுதான் பேரழகு

என்னவளே..
உலகில் ஏழு அதிசயங்களில்
தாஜ்மஹால் அழகு அதைவிட
நீ மிக அழகு
என்னவளே... கண்ணாடி
தொட்டியில் எத்தனை வண்ண
மீன்கள் அழகாக இருந்தாலும்
உன் இரண்டு கண்களில்
அழகுக்கு ஈடு இணை ஏது

என்னவளே...
பிப்ரவரி 14 மட்டும்
காதலர் தினம் அல்ல
எல்லா தினமும் காதலை
கொண்டாடும் தினம் தான்
நமக்கு

**"போயஸ் கார்டன்" பொன்விழி** அன்னூர்






## நெஞ்சமெல்லாம் நீயே:

உந்தன் நினைவு
உள்ளம் முழுவதும்
உந்தன் நினைவே
உள்ளம் முழுவதும் ..

ஒன்றும் புரியாது
ஒன்றும் தெரியாது
ஏனோ இங்கே
வந்திடும், தங்கிடும்!!

உந்தன் நினைவு
உந்தன்நினைவு!
அந்த நினைவே
ஆடிடும் சக்தியே!!

எத்தனை நினைவுகள்
எத்தனை கனவுகள்
அத்தனை நினைவும்...
ஆயிரம் அலகுகள்

எத்தனை நிகழ்வுகள்...

மொத்தமாய் இங்கே!!
மொத்தமும் காட்டும்முன்
முழுப்பல மதனை!

நினைவே கனவாய்!
கனவே நினைவாய்!
நினைவுகள் ஓர்சக்தி
நினைவுகள் ஓர்பக்தி !

நெஞ்சுக் குழிக்குள்
நின்றே சிக்கிய
பஞ்சுமொழி வார்த்தைகள்
பட்டென வெளிவரும்!!
அங்குள்ள ஒளிக்கற்றை
இங்கும் இருக்கும்
இங்குள்ள ஒளிக்கற்றை
அங்கும் இருக்கும் !!

இரண்டும் ஒன்றென
இருவரும் அறிவோம்.
திரண்டு தெறிக்கும்
தீர்க்கமாய் அதுவே!!

அங்கும் இங்கும்
அதேநேரம் அதேவேகம்..
மங்காநுண் ணுணர்வா?
மறுக்கா என்மனமா?

என்னில் தங்கும்
எப்போதும் எப்போதும்...
உன்நினைவா? உள்நினைவா?

எப்படிச் சொல்வேன் ?
என்னென்று சொல்வேன் ?
ஒப்பில்லா இந்த
ஒற்றுமைக் காதலை!!

**வைரமணி** , சென்னை

## எங்கே தேடுவேன் இன்னும் ஒரு சுதந்திரம்?

பெண்களை வீட்டிற்குள்
அடைத்து வைத்த
இருண்ட காலத்திலிருந்து
நாம் மீண்டிருக்கலாம்...
பெண்ணடிமைத்தனத்திலிருந்து
விலங்குகள்
உடைந்திருக்கலாம்...
ஆனால், ஆண்களே
பெண்களை 'இறையாக்கும்'
இந்தக் கொடுரக்
காலத்திலிருந்து
இன்னும் நாம்
விடுபடவில்லை!
ஆண் முடிபோடக் கயிறு
விழுந்தது குற்றமா?
வயிற்றுப் பிழைப்பிற்காகப்
பணி தேடியது குற்றமா?
தேடிய வேலையில்...
கயவனின் கண்கள் வலை
விரிக்கப் பார்க்க, தீ
மூட்டும் பார்வையால் –
அவள்
தற்காத்துத் தவித்தது
குற்றமா? அன்புக்கரம்
நீட்டிய கைகள் எல்லாம்
அல்லல் தரும் கைகளாய்
மாற... தன் கையில் ஒரு
குழந்தையுடன் – இங்கே
தஞ்சமின்றி ஓடித் திரிகிறாள்
ஒரு பெண்பாவை!
"மனிதர்களே இல்லாத
பூலோகம் வேண்டும்" என
மண்ணுக்கடியில் சென்று
மறைந்திடவா என்று
யோசித்த அந்த மங்கை...
தனக்காக இல்லாவிட்டாலும்–
தன் பிள்ளைக்காக ஆவேசம்
கொண்டு எழுந்தாள்!
உழைப்பதற்கு இரு கைகள்
இருந்தாலும், தன்னைப்
பாதுகாக்கப் பத்து கரங்கள்
வேண்டும் எனத் துணிந்தாள்;
அன்று முதல் பூண்டாள்
ஒரு புதுக்கோலம்... அநீதி
அழிக்கும் 'காளி' தாயாய்!
இனி... எதிர்பார்ப்புகளின்
பிடியில் சிக்கி இங்கு
சுதந்திரம் தேடுவதை விட்டு,
தனக்குள்ளே ஒரு



பிரபஞ்சத்தை
உருவாக்கி– அவள்
சுதந்திரமாய்
சிறகடிக்கத்
தொடங்கினாள்!

**கவிஞர் ஜானகி**
துறையூர்

## ஏங்கி தவிப்பேன்"

வானம் வெளுக்கும்
முன் எழுந்திடுவாய்!
சாணம் கரையும்
தெளித்திடுவாய்!
பானம் அருந்து
முன் வந்திடுவாய்!
நாணம் வந்தவுடன்
பறந்திடுவாய்!
விளக்கின் கோலமிட்டு
மன இருளை
போக்கிடுவாய்!
வழக்கு போடும் முன்
கண் எதிரே
நின்றிடுவாய்!
எனக்கு ஒன்றென்றால்
புழுபோல துடித்திடுவாய்!
கூடி வாழ்ந்ததில்லை!
கூடல் கொண்டதில்லை!
ஊடல் கொள்வதிலே
உனக்கு இணை யாரும்
இல்லை!வா ....வா....
எந்தன் மனமே!
ஏங்கி தவிப்பேன்
தினமே!!!



**கவிஞர்**
**பொன். பனகல்**
**பொன்னையா**

நீயே உனக்கென்றும் துணை
சாண் வயிற்றுப் பசிக்குச்
சாப்பாடு தேடுகையில்
உனக்குள் நீயே
எண்ணிக்கொள்
நீயே உனக்கென்றும் துணை

சிரித்துப் பேசி உறவாடி
சிந்தனையில் உனைத்
தூண்டி தேவைக்குப்
பயன்படுத்தி துயரத்தில்
கைவிடும் உறவை
நினைக்கையில்
உனக்குள் நீயே
எண்ணிக்கொள்
நீயே உனக்கென்றும்
துணை

தடுமாறி தடுக்கி
விழுந்து கை
கொடுப்பார் எவருமின்றி
உதவிக்கு யாருமின்றி
ஊன்றுகோல் தேடி
சுயமாக எழுகையில்
எண்ணிக் கொள்
நீயே உனக்கென்றும் துணை
காசு பணம் சேருகையில்
கவலையின்றி இருக்கையில்
காத்திருந்து உறவாடும்

காசு பணம் கையிலில்லை
கஞ்சிக்கு வழி இல்லை
சுற்று முற்றும் பார்த்தால்
சொந்தமென்று sஎவருமில்லை



காலம் மாறும்
கவலைகள் தீரும்
உனக்குள் நீயே
எண்ணிக்கொள்
நீயே உனக்கென்றும்
துணை

**தமிழ்நிலா**



## ரோஜா மலரே !

பூ.விர்க்கும் பாட்டியிடம்
காதலர் தினத்தன்று
ஒரு ரோஜாவை இறவல்
கேட்டேன் !

"ஏன் தம்பி காதலர்
தினத்துக்கு கூட காசு
கொடுத்து ஒரு ரோஜா பூ
வாங்கி உன் காதலிக்கு
கொடுக்க முடியாதா !"

நான் சிரித்தேன் !

"பாட்டி எனக்கு காதலியே
கிடையாது , இந்த
ரோஜாவை கையில வச்சு
சாயந்திரம் வரைக்கும்
சுத்துறேன், யாரும்
மாட்டலைனா உங்ககிட்டயே
ரோஜாவை திருப்பி
கொடுத்துவிடுவேன்!'
என்ற... என் நிலையை
கண்டு வருத்தப்பட்ட பாட்டி



அழகிய
ரோஜாவை
எனக்கு
பரிசளித்தார் !

**எம்.பி.**
**தினேஷ்.**
கோவை



## காதல் தொடர்கதை

கண்களில் அடைக்க
நினைத்தேன், கவிதையில்
அடைக்க நினைத்தேன்,
கற்பனையில் அடைக்க
நினைத்தேன், காதலில்
அடைக்க நினைத்தேன்,
ஆனால் அன்பே,
எதற்காகவும் அடங்காமல்,
எப்போதும் தொடர்கின்றது,
எந்தன் காதலைப்போலவே,
உந்தன்
நினைவுகளும், முடிவே



இல்லாமலும்,
முற்றுப்பெற
இயலாமலும்,
என்றும்
தொடர்கதையாய்!

**சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை



## காயப்படுத்தாத காதல்

பெற்றோரை "நேசித்தக்
காதல்" உயிர்ப்பாசமானது !

உடன்பிறந்தாரை
"நேசித்தக் காதல்"
இரத்த பாசமானது !

உறவினர்களை
"நேசித்தக் காதல்"
சொந்தபந்த பாசமானது !

நண்பர்களை "நேசித்தக்
காதல்" நட்பானது !

இறைவனை
"நேசித்தக் காதல்"
பக்தியானது !

" பெண்ணே "உன்னை
மட்டுமே "நேசித்தக்காதல்"
காதலானது !
இந்தக் காதலை
"பெற்றோரின் சம்மதத்துடன்"
புனிதக்காதலாக
மாற்றுங்கள் "திருமணம்"
செய்துகொள்ளுங்கள் !

அதை விட்டுவிட்டு
பெற்றோருக்குத் தெரியாமல்
"துரோகம்" செய்து
"ஓடிப்போய்" திருமணம்
முடித்து "நாடோடிக்காதலாக"
மாற்றதீர்கள்
காதலர்களே !



உண்மையான
"காதல்"
யாரையும்
"காயப்படுத்தாது"
"கேவலப்படுத்தாது"
"துரோகம் செய்யாது"
உணர்வுப்பூர்வமாக
வெற்றியடையும்போது
"தெய்வீகக் காதலாகும்"

**G.A. கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## என்னவள்!

சேலையணிந்த
கவிதை என்னவள்!

மூளையின் மூலையில்
நிரந்தரமாய் வசிப்பவள்
என்னவள்!

சுடிதார் அணியும்
சொர்க்கம் என்னவள்!

நடமாடும் சிரபுஞ்சி
என்னவள்!

கால் முளைத்த
தாஜ்மகால் என்னவள்!

நடந்து வரும்
பிருந்தாவனம் என்னவள்!

நடமாடும்
நயாகரா என்னவள்!

கூந்தல் உள்ள
குற்றாலம் என்னவள்!

விழிகளால் பேசும்
விசித்திரம் என்னவள்!

உலா வரும்
நூலகம் என்னவள்!

இல்லை இப்போது
அன்னப்பறவை
எடுத்துக்காட்டு என்னவள்!

பலாவை மிஞ்சும்
இனியவள் என்னவள்!

சிறகு முளைக்காத
வண்ணத்துபூச்சி என்னவள்!

பசியை மறக்கடிக்கும்
பாவை அவள் என்னவள்!

தேன் சிந்தும்
பூஞ்சோலை என்னவள்!

**கவிஞர் இரா. இரவி**

வானொலி தினம்

## வானொலி

முதன்முதலாய்
நீ என் வீட்டில்
நுழைந்தபோது
தெருவே திருவிழாவானது.

உன் பெயர்சொல்லியே
என் வீடு விளம்பரமானது.

அதிகாலை செய்திகளுக்காய்
ஆளுக்கு ஆள் அலைபாயும்.

அலைவரிசையின்
பாடல்களுக்கு தாவரங்களும்
தலையாட்டும்.

ஒலிச்சித்திரம் கேட்டுக்கேட்டு
அதை ஊர் முழுக்கக்
கதை பேசும்.

நாடகங்களின் நாட்களுக்காய்
கால்கடுக்க காதுகளெல்லாம்
தவமிருக்கும்.

மட்டைப் பந்து
வருணனைக்காக
உன்னை எப்போதும்
கட்டிக்கொண்டே
தூங்குவோம்.

சாயங்கால சங்கீதம் கற்க
ஜரிகை வேட்டிகள்
எங்களுக்கு ஜால்ரா தட்டி



தாஜா செய்யும்.
நீ வானிலையை
வாசித்தபிறகுதான்
எங்களோடு வானம் பேச
ஆரம்பித்தது.

உள்ளே யாரோ
ஒளிந்துகொண்டு
ஒலி கொடுப்பதாய்
உன் பின்னே பலரும்
ஊடுறுவி உளவு பார்த்தக்
கதைகளுமுண்டு.

உழைப்பின் அசதியில்
உறங்கும் பலருக்கு
உன் தேனிசைதான்
தாலாட்டு.

அப்போதெல்லாம் ஆலய
வீதிகளில் உன் குரலே
ஆலாபனையாய்
எதிரொலிக்கும்.

சினிமாக் கொட்டகைகளின்
அழைப்பு மணியும் நீ.

திருமண விழாக்களில்
மங்கல வாழ்த்தும் நீ.

திரைப்பாடல்களைக்
காற்றில் சுமந்து
இசை பரப்பினாய்.

டி.எம்.ஸ்,சீர்காழி எனப் பலரை
அறிமுகப்படுத்தினாய்.

எம்.எஸ்.வி, இளையராஜா
எங்கள் இதய நரம்பினில்
இசை மீட்டனர்.

காற்றில் இசையை இழை
பிரித்தே காந்தமாக
மனம் ஈத்தனர்.

எம்.ஜி.ஆர் , சிவாஜி
உன்னால் ஜனங்களின்
தெய்வமானார்கள்.

ரஜினியும் கமலும்
இளைஞர்களின்
தேவையானர்கள்.

இன்று வலைதளங்களில்
வானத்தையே
வளைக்கும் வசதியிருந்தாலும்

வானொலியில் காதோரம்
ஒலிக்கும் மெல்லிசைதா
உயிர் தடவி உறக்கம் தரும்
மயிலிறகின் ஒத்தடமாகும்.

**சந்திரசேகரன்.**

1. புகழ்ச்சியில் வாழ்பவனுக்கு
தான் பிறர் துணை தேவை
முயற்சியில் வாழ்பவனுக்கு
தன்னம்பிக்கை தான் துணை

2. கெட்ட பழக்கம் உள்ளவன்
திருந்த அதிக வாய்ப்பு
உள்ளது ஆனால் கெட்ட
எண்ணங்கள் உள்ளவன்
திருந்த வாய்ப்பு குறைவு

3.பிறருக்கு
தேவைப்படும்போது
நீ ஏணி தேவை முடிந்தால்
தேவையில்லாத ஆணி
இதை புரிந்தால் நீ ஒருஞானி

4. மனிதன் நிம்மதியாக
இருக்கும்போது கடவுள்
கல்லாக தெரிகிறார்
ஒரு மனிதன் நிம்மதி
இல்லாமல் இருக்கும் போது
கல் கடவுளாக தெரிகிறது



5.வார்த்தைகள்
ஏதும் இன்றி
அன்பை
வெளிப்படுத்தும்
ஒரே மொழி
புன்னகை

**நடேஷ்கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## அழகிய ஆதவன்....

பனி படர்ந்த மலர் போல...
வாசமிழந்து கிடக்கின்றன...
உன் நினைவுகள்...



அழகிய
சுடரொளி...
நீ எதிர்
படுகையில்...
கரைந்து
போகக்கூடும்...
அத்தனை
சோகங்களும்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## எத்திசையும்புகழ்மணக்க!

அறுசீர் மண்டிலம்.

இலக்கிய இலக்கணம்
தந்தாய் இனிமையாம்
ஏடுகள் தந்தாய்
கலைகளைக் கண்டுநீ
தந்தாய் காட்சிகள்
மாட்சியாய்த்தந்தாய்!
நலங்களை நலமுடன்
தந்தாய் நாளெலாம் உருகிட
வந்தாய் வளங்களே நிரம்பிட
வந்தாய் வண்ணமாய்ப்
பன்னூலே தந்தாய்!

அழகுடன் அற்புதம்
தந்தாய் அருளுடன்
பொற்பதம் தந்தாய்
எழிலுடன் ஏற்றமும்
தந்தாய் இயங்கவே
அனைத்தும் தந்தாய்
பழகிடும் மொழியென
வந்தாய் பண்பினைக்
கொடுத்திட வந்தாய்
பழக்கமும் வழக்கமும்



தந்தாய்
பாங்குடன்
அன்னையாம்
தமிழே!

**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## தனிமையோடு பேசுங்கள்

உங்களுக்குள்ளே பேசிப் பாருங்கள் பேசுவது சரியா?
உலகம் ஏற்குமா? மறுக்குமா? என்றே சிந்தியுங்கள்!

மனசாட்சியோடு எதையும் பேசிப் பாருங்கள்
மனம் சொல்லும் இதைச் செய், இதைச் செய்யாதே என்று!

மனசாட்சியின் சொற்படி வாழ்ந்து வந்தால்
மனம் போல் வாழ்க்கை மகிழ்வாக அமையும்!

எதையும் ஏன்? எதற்கு? எப்படி? எதனால்? சரியா?
என்றே உங்களுக்குள் நாளும் கேட்டுப் பாருங்கள்!

சரியென்று தோன்றினால் ஏற்று நடங்கள்
சரியன்று என்று தோன்றினால் தவிர்த்து விடுங்கள்!

உங்களுக்கு நீங்களே நீதியரசராக இருந்திடுங்கள்
ஒருபோதும் யாருக்கும் அநீதி இழைக்காதீர்கள்!

மேடைகளில் பேசப் போகும் முன்னே உங்கள்
மனத்தால் முதலில் பேசிப் பாருங்கள் நன்றாக!

ஒரு சொல் வெல்லும் ! ஒரு சொல் கொல்லும்
ஒருபோதும் கொல்லும் சொல் பேச வேண்டாம்!



பிறர் மனம் புண்படும்படி பேசவே வேண்டாம்
பிறர் மனம் பாராட்டும்படி பேசுவது நன்றாகும்!

உறவுகளிடம் பேசப் போகும் முன்னே முதலில்
உங்களுக்குள் பேசிப் பார்த்துச் செல்லுங்கள்!

நண்பர்களிடம் பேசப் போகும் முன்னே முதலில்
நன்றாகப் பேசிப் பார்த்துச் செல்லுங்கள்!

உயர் அலுவலரிடம் பேசப் போகும் முன்னே
உங்களுக்குள் பேசிப் பார்த்துச் செல்லுங்கள்!

பயன் இல்லாத சொற்களைப் பயன்படுத்தாதீர்
பயனுள்ள சொற்களை பயன்படுத்துக! வள்ளுவர் சொன்னபடி!

கேலி கிண்டல் செய்வதிலும் வரையறை உண்டு
கண்டபடி பேசி பகை வளர்க்காதிருக்க வேண்டும்!

கொட்டிய பொருட்களை அள்ளி விடலாம்
கொட்டிய சொற்களை திரும்பப் பெற முடியாது!

உங்களை நீங்கள் மதிப்பிட தனிமையோடு பேசுங்கள்
உங்களை நீங்கள் உயர்த்திட தனிமையோடு பேசுங்கள்!

**கவிஞர் இரா. இரவி!**

## "மேக்கப் போட்ட நாகங்கள்"

மேக்கப் போட்ட நாகங்கள்
மக்களின் கூலியத் தின்று
மாளிகைகள் கட்டுகின்றன!

திரையில் ஏழைத் தாயின்
கண்ணீரை துடைக்கும் கை.
கட் சொன்னதும்
காசோலையில்
கையெழுத்திடும்!

படத்தில் புரட்சி வீரன்,
வெளியில் புரட்டு வியாபாரி!

வீட்டின் முன் பத்து கார்கள்
வரிசை கட்டி ஆனால்
அவன் ரசிகர்கள்
இன்னும் ரேஷன் வரிசையில்!

கைத்தட்டல் கேட்க
காதுகள் பழகி விட்டதால்,
கண்முன் நிற்கும்
உண்மை அழுகுரலை
அவன் கேட்க மாட்டான்.

மேக்கப் தடவிய
முகத்தின் மீது
மக்களின் நம்பிக்கை
தூண்டில் புழுவாய்!

சினிமா போஸ்டரில்
சூரியன் அவன்!
நிஜத்தில் கண்டால்
விரியன் அவன்!

நாகங்கள் கடித்துச்
சாகடிக்கும்; இந்த மேக்கப்



நாகங்கள்
நடித்துச்
சாகடிக்கின்றன!

ஒரு நாள்
மார்க்கெட்
இழந்து மருகும்
போது
கைத்தட்டல்கள் காணாது
போன பின் திமிர்கள்
மறைந்து திசைகள் தெரியும்!

அன்றுதான் தெரியும்
புகழ் என்பதோர்
மாயவலையின் நுனியென்பது!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்


முனீஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998


999 SITE
ARE YOU LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நல்லது.

வழக்குகளில் மெத்தன போக்கு காணப்படும்.

பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பயணங்களால் அலைச்சல் உண்டாகும். மனதில் ஒரு வித கவலை இருக்கும்.

மாணவர்களுக்கு தடைகளை தாண்டி கல்வியை கற்க செய்யும் முயற்சி வெற்றி பெறும்.

### தனுசு

இந்த வாரம் தேவையற்ற மனக் கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும்.

நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வரலாம்.

பெண்களுக்கு தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். பண வரத்து திருப்தி தரும். தேவையான உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். விளையாட்டு போட்டிகளில் திறமை வெளிப்படும்.

### மகரம்

இந்த வாரம் வேலைப்பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும்.

கை, கால் வலி, உடல் சோர்வு உண்டாகலாம். அக்கம் பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். கவுரவம் பாதிக்கும்படியான சூழ்நிலை வரலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சனைகள் அதனால் வாக்குவாதம் போன்றவை உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்று ஏற்படலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலை பளு ஆகியவை அதிகரிக்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்களுக்கு அடுத்தவரை பற்றிய விமர்சனங்கள் தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.

### கும்பம்

இந்த வாரம் எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். பண வரத்து திருப்தி தரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்க காணப்படும். மதிப்பு கூடும்.

பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும்.

எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும் பயணங்களின் போது கவனம் தேவை. மாணவர்களுக்கு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்..

### மீனம்

இந்த வாரம் மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம்.

சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பண தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம்.

கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும்.

பெண்களுக்கு கோபத்தை கட்டுப் படுத்துவதும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நன்மை தரும்.

மாணவர்களுக்கு சக மாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்.

# 12,300 ரயில் பெட்டிகளில் சிசிடிவி கேமராக்கள் : அஸ்வினி வைஷ்ணவ் தகவல்

**புதுடெல்லி, பிப்.15:**

நாடு முழுவதும் 12 ஆயிரத்து 300 ரயில் பெட்டிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ரயில் பெட்டிகளிலும், என்ஜின்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவது தொடர்பாக பிராந்திய ரயில்வே நிர்வாகங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல் எதுவும் வழங்கியுள்ளதா என மாநிலங்களவையில் காங்கிரஸ் எம்.பி. அனில்குமார் யாதவ் வினவியிருந்தார்.



இதற்கு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துபூர்வமாக தாக்கல் செய்துள்ள பதிலில் கூறப்பட்டிருப்பதாவது:

பயணிகளின் பாதுகாப்புக்காகவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் ரயில் பெட்டிகளிலும், என்ஜின்களிலும் சிசிடிவி கேமராக்களை பொருத்தும் பணியில் இந்திய ரயில்வே ஈடுபட்டுள்ளது.

ரயில் பெட்டிகள், என்ஜின்களுக்குத் தேவையான சிசிடிவி கேமராக்களை கொள்முதல் செய்வது, அவற்றைப் பொருத்துவது ஆகிய பணிகளை அந்தந்த பிராந்திய ரயில்வேயும், ரயில் பெட்டி தயாரிப்பு பிரிவும் செய்து வருகின்றன.

இதுவரையிலும், ஏறத்தாழ 12,300 ரயில் பெட்டிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வந்தே பாரத், அம்ருத் பாரத் ரயில்கள் அனைத்திலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுவிட்டன. இதுதவிர, 460 ரயில் என்ஜின்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

3.03 கோடி கணக்குகள் செயலிழப்பு:

தத்கல் டிக்கெட் முன்பதிவில் முறைகேடு நடைபெறாமல் தடுப்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, ஓடிபி அடிப்படையில் பயணிகளின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்படுவதாகவும், இதனால் வெளிப்படைத் தன்மை அதிகரிப்பதோடு, உண்மையான பயணிகள் பயனடைய முடிகிறது என அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பயனர்களின் இணையதள கணக்குகள் தீவிர சரிபார்ப்பு நடவடிக்கையின் மூலம், 2025-ஆம் ஆண்டில் மட்டும் 3.03 கோடி போலி கணக்குகள் செயலிழப்பு செய்யப்பட்டதாகவும் அவா் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் ஐபிஎல் 2026 போட்டிகளை நடத்த கர்நாடக அரசு அனுமதி

**பெங்களூரு, பிப்.15:**

"விளையாட்டு மற்றும் ரசிகர்களின் ஆர்வம் காரணமாக எம்.சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் ஐபிஎல் போட்டிகள் நடத்துவதற்கு அனுமதி வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதில் மக்களுக்கான பாதுகாப்பு சார்ந்த விவகாரத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

நீதிபதி குன்ஹா அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் டிக்கெட் வழங்குவது முதல் பார்வையாளர்களுக்கான பல்வேறு விதிமுறைகள் கட்டாயம் பின்பற்ற வேண்டும். பொறுப்புணர்வுடன் முன்னோக்கி செல்கிறோம்" என கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

ஐபிஎல்போட்டிகளைமீண்டும்சின்னசாமிமைதானத்தில் நடத்த மாநில அரசு அனுமதி அளித்துள்ளதன் மூலம் நடப்பு சாம்பியனான ஆர்சிபி அணி இந்த சீசனில் ஹோம் போட்டிகளை இங்கு விளையாடலாம். வழக்கமாக நடப்பு சாம்பியனின் சொந்த மைதானத்தில் ஐபிஎல் சீசனுக்கான முதல் போட்டி, குவாலிபையர் 2 மற்றும் இறுதிப் போட்டியை நடத்தும் உரிமை வழங்கப்படும். அந்த வகையில் இந்த முறை அந்த வாய்ப்பை சின்னசாமி மைதானம் பெற்றுள்ளது.

கடந்த சீசனில் ஆர்சிபி அணி சாம்பியன் பட்டம் வென்றது. முதல் முறையாக அந்த அணி பட்டம் வென்றதை தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூன் 4-ம் தேத பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி மைதானத்துக்கு வெளியே ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் இறந்தனர். இதைத் தொடர்ந்து சின்னசாமி மைதானத்தில் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளையும் நடத்த கர்நாடக மாநில அரசு தடைவிதித்தது. தொடர்ந்து மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்ய சிறப்பு குழு ஒன்றையும் மாநில அரசு நியமித்தது. இந்த சூழலில் தற்போது மீண்டும் ஐபிஎல் போட்டிகளை பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடத்த அனுமதி அளித்துள்ளது.

### அமெரிக்காவுக்கு முதல் வெற்றி

**சென்னை, பிப்.15:**

அதிகபட்சமாக சாய் தேஜா முக்கமல்லா 51 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 79 ரன்கள் விளாசினார். முன்னதாகதொடக்க வீரர்களான கேப்டன் மோனங்க் படேல் 22 பந்துகளில், 36 ரன்களும் சஹாயன் ஜகாங்கிர் 14 பந்துகளில் 20 ரன்களும் சேர்த்துஆட்டமிழந்தனர். சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி 1 ரன்னில் வெளியேறினார். இறுதிக்கட்ட ஓவர்களில் சுபம் ரஞ்சனே 24 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 48 ரன்கள் விளாசினார். நெதர்லாந்து அணி சார்பில் பாஸ் டி லீடு 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 197 ரன்கள் இலக்குடன் பேட் செய்த நெதர்லாந்து 15.5 ஓவர்களில் 103 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக பாஸ் டி லீடு 23, ஸ்காட் எட்வர்ட்ஸ் 20 ரன்கள் சேர்த்தனர். அமெரிக்க அணியின் பந்துவீச்சில் ஹர்மீத் சிங் 4 விக்கெட்களை சாய்த்தார். சால்விக் 3, முகமது மோசின் 2 விக்கெட்களை வீழ்த்தினர். 93 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அமெரிக்க அணி நடப்பு தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது.

# திருப்பதி லட்டு கலப்படத்தை மறைப்பது பாவச் செயல்: சந்திரபாபு நாயுடு

**திருப்பதி, பிப்.15:**

திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தை பொதுமக்களிடமிருந்து மறைப்பது பெரும் பாவச் செயலாகும் என ஆந்திர முதல்வர் என். சந்திரபாபு நாயுடு வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.




ஆந்திரத்தில் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் (2019-2024), திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டுகளை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்கு கொழுப்பு கலக்கப்பட்டதாக, கடந்த 2024-ஆம் ஆண்டு மாநில முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டினார். இது நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சிபிஐ தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) நெய்யில் விலங்கு கொழுப்பு கலக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்தது. மாறாக பால் அல்லது வெண்ணெய் என பால் சார்ந்த பொருள்களுக்குப் பதிலாக தரம் குறைந்த நெய், பாமாயில் உள்ளிட்ட கலப்பட பொருள்கள் மூலம் திருப்பதி லட்டுகள் தயாரிக்கப்பட்டதாக எஸ்ஐடி அண்மையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இதையடுத்து, தங்கள் மீது போலியான குற்றச்சாட்டுகளை சுமத்திய சந்திரபாபு நாயுடு மன்னிப்புக் கோர வேண்டும் என ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் வலியுறுத்தியது.

இந்நிலையில், ஆந்திர பேரவையில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய சந்திரபாபு நாயுடு, 'திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தை பொதுமக்களிடமிருந்து மறைப்பது பெரும் பாவச் செயலாகும். அது பொதுமக்களின் நம்பிக்கைக்கு இழைக்கும் துரோகம்.

எதிர்காலத்தில் இந்த விவகாரத்தில் ஏதேனும் பிரச்னைகள் ஏற்பட்டிருந்தால் அதற்கு மாநில அரசே பொறுப்பேற்றிருக்க வேண்டியிருக்கும். யாருடைய உணர்வுகளையும் பாதிக்கச் செய்வது அரசின் நோக்கமல்ல. ஒவ்வொரு கோயிலின் புனிதத்தன்மையையும் பாதுகாப்பது தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பொறுப்பு என பொதுமக்களுக்கு உறுதியளிக்கிறேன்' என்றார்.

# பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல்கட்ட அமர்வு அமளியுடன் நிறைவு: மீண்டும் மார்ச் 9-இல் கூடும்

**புதுடெல்லி, பிப்.15:**

நடப்புநாடாளுமன்றபட்ஜெட் கூட்டத் தொடரின் முதல்கட்ட அமர்வு வெள்ளிக்கிழமை அமளியுடன் நிறைவடைந்தது. இரு அவைகளும் மீண்டும் மார்ச் 9-ஆம் தேதி கூடும்.




பல்வேறு மத்திய அமைச்சகங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை நிலைக்குழுக்கள் ஆராய்வதற்காக இந்த இடைவெளி விடப்பட்டுள்ளது.

கடந்த ஜன.28-இல் குடியரசுத் தலைவா் உரையுடன் தொடங்கிய பட்ஜெட் கூட்டத் தொடரில், 2026-27-ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் கடந்த பிப்.1-இல் தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் கூட்டத் தொடரின் முதல்கட்ட அமா்வு வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது. இரண்டாம் கட்ட அமா்வு, மாா்ச் 9-இல் தொடங்கி ஏப். 2 வரை நடைபெறும். அத்துடன் பட்ஜெட் கூட்டத் தொடா் நிறைவு பெறும்.

முதல்கட்ட அமா்வின் இறுதி நாளான வெள்ளிக்கிழமையும் இந்திய-அமெரிக்க வா்த்தக ஒப்பந்த விவகாரத்தை எழுப்பி எதிா்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. மத்திய அமைச்சா் ஹா்தீப் சிங் புரி (எப்ஸ்டீன் ஆவணங்கள் விவகாரம்) பதவி விலகக் கோரி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கூச்சல்-குழப்பம் காரணமாக, அவை அலுவல்கள் மாா்ச் 9-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

அமளிக்கு பஞ்சமில்லாத அமா்வு: மக்களவையில் குடியரசுத் தலைவா் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீா்மானம் மீது கடந்த பிப்.2-இல் பேசிய எதிா்க்கட்சித் தலைவா் ராகுல் காந்தி, இந்திய-சீனப் படையினா் மோதல் விவகாரத்தில் பிரதமா் மோடியை விமா்சிப்பதற்காக முன்னாள் ராணுவ தலைமைத் தளபதி எம்.எம்.நரவணேயின் சுயசரிதை நூலை (இதுவரை வெளியிடப்படவில்லை) அடிப்படையாக கொண்ட ஒரு கட்டுரையைச் சுட்டிக்காட்ட முயன்றாா். ஆனால், விதிமுறைகளைக் குறிப்பிட்டு, அவா் தொடா்ந்து பேச அனுமதி மறுக்கப்பட்டது. அப்போதுமுதல் எதிா்க்கட்சிகள் அமளியைத் தொடங்கின. பின்னா், இந்திய-அமெரிக்க வா்த்தக ஒப்பந்தம், அமெரிக்க பாலியல் குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடா்புடைய ஆவணங்கள் உள்ளிட்ட விவகாரங்களையும் எழுப்பி, எதிா்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன.

## க்ரைம் கார்னர்

### கலெக்டர் பெயரில் பணமோசடி செய்ய முயற்சி: வடமாநில வாலிபர் கைது

**தூத்துக்குடி, பிப்.15:**

தூத்துக்குடி மாவட்ட கலெக்டராக பொதுமக்களிடம் பணம் மோசடியில் ஈடுபடுவதற்காக மாவட்ட கலெக்டரின் புகைப்படத்தை DISPLAY PICTURE ஆக வைத்து பல போலியான வாட்ஸ்அப் கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன எனவும், கணக்குகளை உருவாக்கியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாவட்ட கலெக்டரின் தனிப்பட்ட உதவியாளர் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

அந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவின்படி, தூத்துக்குடி சைபர் குற்றப்பிரிவு காவல்துறை ஏ.டி.எஸ்.பி. (பொறுப்பு) தீபு மேற்பார்வையில், சைபர் குற்றப் பிரிவு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சாந்தி மற்றும் போலீசார் தொழில்நுட்பரீதியாக விசாரணை மேற்கொண்டதில், உத்தரபிரதேசம் மாநிலத்தைச் சேர்ந்த அனுஜ்குமார் (வயது 21) என்பவர் பொதுமக்களிடம் பண மோசடியில் ஈடுபடும் நோக்கத்துடன் தூத்துக்குடி மாவட்ட கலெக்டரின் புகைப்படத்தை பயன்படுத்தி பல போலியான கணக்குகளை உருவாக்கி இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து சைபர் குற்றப்பிரிவு போலீசார் அனுஜ்குமாரை கடந்த 9.2.2026 அன்று உத்தரப்பிரதேச மாநிலம் சென்று கைது செய்து நேற்று முன்தினம் தூத்துக்குடி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் இதுகுறித்து சைபர் குற்றப்பிரிவு போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மாவட்ட கலெக்டரின் புகைப்படத்தை பயன்படுத்தி போலியான கணக்குகளை உருவாக்கி பொதுமக்களிடம் பண மோசடியில் ஈடுபட இருந்த குற்றவாளியை கண்டுபிடித்து கைது செய்த தூத்துக்குடி மாவட்ட சைபர் குற்றப்பிரிவு காவல் துறையினரை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

### சென்னை விமான நிலையத்தில் ரூ.3 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பறிமுதல்

**சென்னை, பிப்.15:**

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்காக்கில் இருந்து விமானம் வந்தது. வடமாநிலத்தை சேர்ந்த 30 வயது வாலிபர், சுற்றுலா விசாவில் தாய்லாந்துக்கு சென்றுவிட்டு திரும்பி வந்திருந்தார்.

அவர் மீது சந்தேகம் அடைந்த சுங்க இலாகா நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள், அவரிடம் இருந்த உடைமைகளை சோதனை செய்தனர். அவரது சூட்கேசுக்குள் செல்பி முறையில் வீடியோ எடுக்கக்கூடிய தானியங்கி புகைப்பட கருவி இருந்தது. மேலும் 8 பதப்படுத்தப்பட்ட உணவு பாக்கெட்டுகள் இருந்தது. அவற்றை பிரித்து பார்த்தபோது ஹைட்ரோபோனிக் என்ற பதப்படுத்தப்பட்ட உயர்ரக கஞ்சா 3 கிலோ மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர். இதன் மதிப்பு சுமார் ரூ.3 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. சுங்க இலாகா அதிகாரிகள் கஞ்சாவை கடத்தி வந்த வாலிபரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### இரிடியம் மோசடி: வடமாநில கும்பலை சேர்ந்த மேலும் 6 பேர் கைது

**கிருஷ்ணகிரி, பிப்.15:**

ரிசர்வ் வங்கி மூலம் வெளிநாடுகளில் இரிடியம் விற்று பணம் பெற்று தருவதாக கூறி பல்வேறு மாநிலங்களில் ஏராளமானவர்களிடம் பல கோடி ரூபாய் வரை மோசடி செய்யப்பட்டது. இந்த மோசடியில் ஏற்கனவே பல்வேறு இடங்களில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.3 கோடி வரை மோசடி செய்யப்பட்டது குறித்து சி.பி.சி.ஐ.டி. விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மோசடி தொடர்பாக பீகாரை சேர்ந்த சோனுகுமார்துபே (வயது 29), தெலுங்கானாவை சேர்ந்த ஜார்ஜ் தாம்ஸ்(35) உள்பட 6 பேரை தனிப்படையினர் கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் நாடு முழுவதும் 23 பேரிடம் ரூ.5 கோடியே 65 லட்சம் வரை மோசடி செய்தது தெரியவந்தது.

## வணிகச் செய்திகள்

### பவுனுக்கு ரூ.1,280 உயர்வு; வெள்ளி மாற்றமின்றி விற்பனை!

**சென்னை, பிப்.15:**

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. சர்வ தேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில், கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கிய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ( பிப்ரவரி 14) தங்கம் விலை மீண்டும் கணிசமாக உயர்ந்துள்ளது. அதன்படி, 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.160 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,560-க்கும், பவுனுக்கு ரூ.1,280 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,16,480-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல், 18 காரட் தங்கம் விலையும் கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.12,450-க்கும்,பவுனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு பவுன் ரூ.99,600-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.20 குறைந்து ஒரு கிராம் ரூ.280-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,80,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# போக்குவரத்து விதிமீறல்கள்: பிகாரில் 10 மாதங்களில் ரூ.300 கோடி அபராதம் விதிப்பு

**பாட்னா, பிப்.15:**

பிகாரில் கடந்த 10 மாதங்களில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக ரூ.301.28 கோடி அபராதங்கள் விதிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் ஷர்வான் குமார் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், கடந்த 10 மாதங்களில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 301.28 கோடி ரூபாய் மதிப்பிலான 4.97 லட்சம் சலான்கள் வழங்கப்பட்டுள்ளன.

டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலான கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 90.97 கோடி ரூபாய் மதிப்பிலான 1.48 லட்சம் சலான்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்த தொகையான 301.28 கோடி ரூபாயில் இதுவரை 115.23 கோடி ரூபாயை துறை வசூலித்துள்ளது.

இந்த சலான்கள் ஏப்ரல் 1, 2025 முதல் பிப்ரவரி 11, 2026 வரை வழங்கப்பட்டவை. மீதமுள்ள தொகையை வசூலிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாநிலம் முழுவதும் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து விதிமீறல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போக்குவரத்துத் துறை தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் நோக்கம் விபத்துகளைக் குறைப்பதே என்று கூறினார். இதனிடையே போக்குவரத்துத் துறை வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த இரண்டு மாதங்களில் போக்குவரத்து விதிமீறல்களில் கைமூர் மாவட்டத்தில் உள்ள பபுவா முதலிடத்தில் உள்ளது.

அங்கு 12.16 கோடி ரூபாய் மதிப்பிலான 30,833 சலான்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து கோபால்கஞ்ச்சில் 8.34 கோடி ரூபாய் மதிப்பிலான 23,308 சலான்களும், கயாவில் 7.88 கோடி ரூபாய் மதிப்பிலான 16,038 சலான்களும் வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 2016 முதல் நீதிபதிகள் மீது 8,600 புகார்கள்: நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, பிப்.15:**

'கடந்த 2016-ஆம் ஆண்டுமுதல் நீதிபதிகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அலுவலகத்துக்கு 8,600-க்கும் அதிகமான புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன' என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு சார்பில் வெள்ளிக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

மக்களவையில் இதுதொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

2016-ஆம் ஆண்டுமுதல் 2025-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் நீதிபதிகளுக்கு எதிராக 8,639 புகார்கள் அளிக்கப்பட்டன. இதில்,



அதிகபட்சமாக 2024-ஆம் ஆண்டு 1,170 புகார்கள் அளிக்கப்பட்டன.

நீதிபதிகள், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு எதிராகப் பெறப்படும் இதுபோன்ற புகார்கள் மீது, துறை ரீதியிலான நடைமுறைகள் மூலம் நடவடிக்கைமேற்கொள்ளப்படும். உச்சநீதிமன்றம் கடந்த 1997-ஆம் ஆண்டு மே மாதம் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது. நீதிபதிகளின் மதிப்புகளை மறுவரையறை செய்வது அதில் ஒன்று. அதாவது குறிப்பிட்ட நீதி நடைமுறை தரங்கள் மற்றும் தத்துவங்களை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் பின்பற்றுவதை இந்த மறுவரையறை வலியுறுத்தியது. அடுத்தது, துறைசார்ந்த நடவடிக்கை தொடர்பான தீர்மானம். அதாவது, நீதிபதிகளின் செயல்பாடுகள் தொடர்பாக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்புகளைப் பின்பற்றாத நீதிபதிகளுக்கு எதிராக உரிய திருத்த நடவடிக்கையை மேற்கொள்வதாகும். ஒருங்கிணைந்த பொது குறைதீர்ப்பு மற்றும் கண்காணிப்பு நடைமுறை (சிபிஜிஆர்ஏஎம்எஸ்) மூலம் பெறப்படும் உயர் நீதிபதிகளுக்கு எதிரான புகார்கள், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கும், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கும் பரிசீலனைக்காக அனுப்பப்படும். இதில், உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு எதிரான புகார்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு அனுப்பப்படும். உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிரான புகார்கள் அந்தந்த உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்தார்.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.28 கோடி

**புதுடெல்லி, பிப்.15:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இலவச தரிசனத்தில் பக்தர்கள் பல மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்கின்றனர். இந்தநிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 61 ஆயிரத்து 632 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 24 ஆயிரத்து 435 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று அறிவிக்கப்பட்ட ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 28 லட்சம்.

# நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்த மாணவி விஷம் குடித்து தற்கொலை

**ஜெய்ப்பூர், பிப்.15:**

ராஜஸ்தான்மாநிலம்கோட்டாமாவட்டத்தில்நீட்உள்பட பல்வேறு போட்டித்தேர்வுகள், நுழைவுத்தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவியர் இங்கு வந்து தங்கி பயிற்சி செய்து வருகின்றனர். ஆனால், தேர்வு அழுத்தம் காரணமாக பல மாணவ, மாணவியர் தற்கொலை எனும் தவறான முடிவை எடுக்கும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இதனிடையே, மத்தியபிரதேச மாநிலம் சட்டர்பூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவி ஜுகி பட்டேல் (வயது 18). இவர் ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் உள்ள பெசண்ட் விஹார் பகுதியில் தங்கி அங்குள்ள நீட் பயிற்சி மையத்தில் இளநிலை நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்தார். இந்நிலையில், மாணவி ஜுகி பட்டேல் நேற்று இரவு விடுதியில் வைத்து விஷம் குடித்துள்ளார். இது குறித்து அறிந்த சக மாணவிகள் அவரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனையில் ஜுகி பட்டேலுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்த மாணவி விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஏ.டி.எம்.மில் நிரப்ப வந்த ரூ.60 லட்சத்துடன் வேன் டிரைவர் ஓட்டம்

**நகரி, பிப்.15:**

ஐதராபாத் அருகே திருமலகிரியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் அஜித் குமார் என்பவர் டிரைவராக பணியாற்றி வந்தார். அவர் ஏ.டி.எம்.களில் பணம் நிரப்ப செல்லும் வாகனத்தை இயக்கி வந்தார். நேற்று முன்தினம் மதியம் அவர், வழக்கம்போல தனது அலுவலக குழுவினருடன் வங்கி ஏ.டி.எம்.மில் பணம் நிரப்புவதற்காக சென்று கொண்டிருந்தார். சில தனியார் வங்கி ஏ.டி.எம்.களில் அவர்கள் பணத்தை நிரப்பினர். மாலை 4.30 மணிக்கு கோபனபள்ளி பகுதிக்கு வந்தனர். பாதுகாவலர்கள் கொஞ்சம் பணத்துடன் ஒரு ஏ.டி.எம். எந்திரத்தை நிரப்பச் சென்றனர். ஒரு பாதுகாவலர் வேன் அருகே இருந்தார். அவர் சிறுநீர் கழித்து வருவதாக அருகில் சென்ற நேரத்தில், டிரைவர் அஜித் பணத்துடன் வேனை எடுத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டார். வேனில் ரூ.60 லட்சம் பணம் இருந்ததாக தெரியவந்தது. இதுகுறித்து போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து, ஓரிடத்தில் கேட்பாரற்று நின்ற வேனை பறிமுதல் செய்தனர். தலைமறைவான அஜித் குமாரை வலைவீசி தேடி வருகின்றனர்.

# பிப். 17- இல் நெருப்பு வளைய சூரிய கிரகணம்



**புதுடெல்லி, பிப்.15:**

நிகழாண்டுக்கான முதல் சூரிய கிரகணம் பிப். 17-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை நிகழவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3.26 மணி அளவில் சூரிய கிரகணம் தொடங்குகிறது. தொடர்ந்து இரவு 7.57 மணிக்கு முடிவடைகிறது. இந்த நெருப்பு வளைய சூரிய கிரகணம் இந்தியாவில் தெரியாது. அண்டார்டிகாவின் தொலைதூரப் பகுதிகள் மற்றும் தென்னாப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலிருந்து மட்டுமே காணமுடியும். அண்டார்டிகா கண்டத்தில் கான்கார்டியா மற்றும் மிர்னி போன்ற இடங்களிலும், தென்னாப்பிரிக்கா, தான்சானியா, சாம்பியா மற்றும் ஜிம்பாப்வே போன்ற நாடுகளில் பகுதியளவும், தென் அமெரிக்காவின் அர்ஜென்டினா மற்றும் சிலியின் சில பகுதிகளில் மட்டுமே இந்த சூரிய கிரகணத்தை தெளிவாக காண முடியும். எனினும் நாஸா தளம், யூ-டியூப் சேனல் மற்றும் இணையதளங்களில் இந்த நிகழ்வை காணலாம்.

சூரிய கிரகணத்தை நாம் வெற்றுக் கண்ணால் காணக்கூடாது. சூரிய ஒளியை ஊடுருவக்கூடிய கண்ணாடிகளை நாம் பயன்படுத்தி பார்க்கலாம். சூரிய கிரகணம் பார்ப்பவர்களாக இருந்தால் குறைவான நொடிகள் மட்டுமே பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் கண்களில் பாதிப்பு உண்டாகலாம். மேலும் கிரகணத்தின்போது நிகழும்போது வெளியில் செல்லும்போது தவிர்க்க வேண்டும். இந்த ஆண்டின் மற்றொரு சூரிய கிரகணம் ஆக. 12-ஆம் தேதி நிகழவுள்ளது. இது ஒரு முழு சூரிய கிரகணம் ஆகும். இது ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் சில பகுதிகளில் தெரியும் என அறிவியல் பலகை அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் பா.ஸ்ரீகுமார் தெரிவித்தார்.

# டில்லியில் 51 ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் திறப்பு

**புதுடெல்லி, பிப்.15:**

டில்லியில் தொடக்க நிலை மருத்துவ சேவைகளை விரிவுபடுத்தும் விதமாக ஃபதேபூர் பெரி பகுதியில் ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திரை முதல்வர் ரேகா வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார். தில்லியில் கடந்த ஆண்டு நடைபெற்ற பேரவை தேர்தலில் வெற்றி பெற்று 27 ஆண்டுகளுக்குப் பிறகு பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தது. இதைத்தொடர்ந்து, முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான அரசு தேர்தல் வாக்குறுதிகளில் அறிவித்தபடி ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்களை திறந்து வைத்துள்ளது. இந்நிலையில், தில்லியின் பல்வேறு பகுதிகளில் புதிதாக 51 ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் திறந்துவைக்கப்பட்டன. ஃபதேபூர் பெரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் ரேகா குப்தா பேசுகையில், 'மருத்துவ சேவைகளைப் பெறுவதில் ஏழைகள் எதிர்கொண்டு பிரச்னைகளை கருத்தில் கொண்டு இந்த மருத்துவ மையங்கள் திறக்கப்படுகிறது' என்றார். மதிபூரில் நடைபெற்ற ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் திறப்பு நிகழ்ச்சியில் தில்லி சுகாதாரத் துறை அமைச்சர் பங்கஜ் குமார் பங்கேற்றார்.

# சபரிமலை தங்கக் கவச முறைகேடு: 2ஆவது நாளாக மாதிரிகள் சேகரிப்பு

**சபரிமலை, பிப்.15:**



சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவசங்களில் இருந்து மாதிரிகள் சேகரிக்கும் பணியில் சிறப்புப் புலனாய்வுக் குழுவினா் (எஸ்ஐடி) வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக ஈடுபட்டனா்.

தங்கக் கவச முறைகேடு வழக்கு விசாரணையின்கீழ், மேம்பட்ட அறிவியல்பூா்வ பகுப்பாய்வுக்காக இந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சபரிமலை கோயிலில் துவார பாலகா்கள், கருவறைக் கதவுகளின் தங்கக் கவசங்கள் கடந்த 2019-இல் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவற்றின் எடை குறைந்ததாகப் புகாா் எழுந்தது. இது தொடா்பாக இரு வழக்குகளைப் பதிவு செய்து, கேரள காவல் துறையின் எஸ்ஐடி விசாரணை மேற்கொண்டு வருகிறது. தங்கக் கவச புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபா் உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூா் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவா்கள் என். வாசு, ஏ.பத்மகுமாா், தேவஸ்வம் வாரிய முன்னாள் நிா்வாக அதிகாரிகள் பி.முராரி பாபு, எஸ்.ஸ்ரீகுமாா் உள்பட 12 போ் அடுத்தடுத்து கைதாகினா். இதில், உண்ணிகிருஷ்ணன் போற்றி உள்பட 5 போ் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனா்.

இதனிடையே, மேம்பட்ட அறிவியல்பூா்வ ஆய்வுகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவசங்களில் மீண்டும் மாதிரிகளை சேகரிக்க கேரள உயா்நீதிமன்றத்திடம் எஸ்ஐடி அனுமதி பெற்றது. மாதாந்திர பூஜைகளுக்காக சபரிமலை கோயில் நடை வியாழக்கிழமை மாலை திறக்கப்பட்ட நிலையில், காவல் துறைக் கண்காணிப்பாளா் எஸ்.சசிதரன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு சபரிமலையில் மாதிரி சேகரிப்பைத் தொடங்கியது. இதற்காக தங்கக் கவசங்கள் கழற்றப்பட்டன. இரண்டாவது நாளாக வெள்ளிக்கிழமையும் இந்தப் பணிகள் தொடா்ந்தன. பிப்.17 வரை ஐயப்பன் கோயில் நடை திறந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜார்க்கண்ட்: காட்டு யானைக் கூட்டம் தாக்கியதில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த 6 பேர் பலி

**புதுடெல்லி, பிப்.15:**



ஜார்க்கண்ட் மாநிலம், ஹசாரிபாக் மாவட்டத்தில் உள்ள கோண்ட்வார் கிராமத்தில் வியாழக்கிழமை இரவு காட்டு யானைக் கூட்டம் தாக்கியதில் 6 பேர் பலியாகினர். பலியானவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் அடங்குவர்.

பலியானவர்கள் சூரஜ் பூயன் (55), அவரது மருமகள் சுமன் தேவி (25), சுமனின் இரண்டு மைனர் குழந்தைகள், மங்க்ரா பூயன் (58), மற்றும் தனேஷ்வர் ராம் (சுமார் 55) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சூரஜ் பூயனும் அவரது குடும்பத்தினரும் தங்கள் வீட்டிற்குள் தூங்கிக் கொண்டிருந்தனர். கட்டடம் தாக்கப்பட்ட போது அவர்களால் தப்பிக்க முடியவில்லை. சத்தம் கேட்டு, கிராமவாசிகள் ஓடிவந்து, டிரம் அடித்து, பாத்திரங்களை அடித்து, டார்ச்சுகளை மின்னும் வகையில் விலங்குகளை விரட்ட முயன்றனர். பிறகு யானைகள் அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குள் புகுந்தது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்த உடனேயே, மாவட்ட நிர்வாகம், காவல் துறை மற்றும் வனத் துறையைச் சேர்ந்த குழுக்கள் விரைந்தன. உடல்கள் கூராய்வுக்கு அனுப்பப்பட்டு, சொத்து சேதம் குறித்த மதிப்பீடு தொடங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்கும் பணியை அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

மேலும் இரவு நேரங்களில் குடியிருப்பாளர்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

கிராமவாசிகளின் கூற்றுப்படி, ஐந்து யானைகள் கொண்ட கூட்டம் அதிகாலை 1 மணி முதல் அதிகாலை 2 மணி வரை கிராமத்திற்குள் நுழைந்தது.

அப்போது பெரும்பாலான குடியிருப்பாளர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர்.

யானைகள் பல மண் வீடுகளை சேதப்படுத்தியதாகவும், குடியிருப்பு வழியாகச் செல்லும்போது சுவர்கள் மற்றும் கதவுகளை உடைத்ததாகவும் தெரிவித்தனர்.

# 25 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி



**புதுடெல்லி, பிப்.15:**

நாட்டில் கோதுமை உள்ளிட்ட பொருள்களின் இருப்பு அளவு, விலை நிலவரம், ஏற்றுமதியை அனுமதிப்பதால் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகளைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களிடம் இப்போது 75 லட்சம் டன் அளவுக்கு கோதுமை கையிருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 32 லட்சம் டன் அதிகமாகும். இதனால், நாட்டில் கோதுமை விநியோகத்தில் எவ்வித பிரச்னையும் வராது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

2026 ஏப்ரல் 1-ஆம் தேதி மத்திய அரசின் இந்திய உணவுக் கழகத்தில் 182 லட்சம் டன் அளவுக்கு கோதுமை கையிருப்பு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இப்போது வழங்கப்பட்டுள்ள ஏற்றுமதி அனுமதி உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. 2026 ரபி பருவத்தில் கோதுமை சாகுபடி பரப்பளவு 334.17 லட்சம் ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. கடந்த ஆண்டு 328.04 லட்சம் ஹெக்டேர் அளவுக்கே சாகுபடி செய்யப்பட்டது. குறைந்தபட்ச ஆதரவு விலை உறுதியாகக் கிடைப்பது, சிறப்பான கொள்முதல் நடவடிக்கை ஆகியவற்றின் காரணமாக விவசாயிகள் அதிக அளவில் கோதுமை சாகுபடி செய்துள்ளனா். இதன்மூலம் நாட்டில் கோதுமை உற்பத்தி மேலும் உத்வேகம் பெறும். சர்க்கரையைப் பொறுத்தவரை, 2025-26 பருவத்துக்கான கரும்பு ஆலைகளின் கோரிக்கையை ஏற்று 5 லட்சம் டன் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கடந்த 2025 நவம்பரில் 15 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது என்றும் மத்திய உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# டில்லி மாநகராட்சியில் 2026-27-ஆம் ஆண்டுக்கான ரூ.17,500 கோடிக்கான பட்ஜெட் தாக்கல்

**புதுடெல்லி பிப்.15:**

தில்லி மாநகராட்சி 2026-27-ஆம் ஆண்டுக்கான ரூ.17,583 கோடி பட்ஜெட்டை வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது. இதில் சுகாதாரத் துறைக்கு அதிகப்படியாக ரூ.4,797.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கிராமப்புறங்களில் சொத்து வரி நிவாரணம், தினசரி ஊதிய ஊழியா்களை முறைப்படுத்துதல் மற்றும் விரிவாக்கப்பட்ட சுகாதார வசதிகள் போன்ற புதிய முயற்சிகளை எடுத்துரைக்கும் முக்கிய திட்டங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்தன.



பட்ஜெட் தாக்கலின் போது அவைத் தலைவா பிரவேஷ் வாஹி ஆற்றிய உரை வருமாறு: தில்லியின் பொது நிா்வாகத்திற்கு ரூ.3,548.63 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறைக்கு ரூ.3,264.84 கோடியும், பொறியியல் துறைக்கு ரூ.1,884.43 கோடியும், தோட்டக்கலைத் துறைக்கு ரூ.414.16 கோடியும், கால்நடைத் துறைக்கு ரூ.137 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2026-27-ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வருமானம் ரூ.17,184 கோடியாகவும், செலவினம் ரூ.17,583 கோடியாகவும் நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

சொத்து வரி விலக்கு: கிராமப்புற குடியிருப்பாளா்களுக்கு பயனளிக்கும் வகையில், 49 முழு கிராமங்களில் 500 சதுர மீட்டருக்கும் குறைவான பரப்பளவு கொண்ட மூதாதையா் வீடுகளின் உரிமையாளா்களுக்கு முழு சொத்து வரி விலக்கு அளிக்கப்படும்.

200 சதுர மீட்டா் வரை வீடுகளைக் கொண்ட நகரமயமாக்கப்பட்ட கிராமங்களில் வசிக்கும் பூா்வீக குடியிருப்பாளா்களுக்கும் இந்த சொத்து வரி விலக்கு வழங்கப்படும்.

நகராட்சி ஊழியா்களின் கவலைகளை நிவா்த்தி செய்யும் வகையில், மாநகராட்சியின் எம்டிஎஸ் பிரிவு ஊழியா்களுக்கு சமமான ஊதியம் வழங்கப்படும். பொறியியல், சுகாதாரம், ஆயுஷ் மற்றும் பிற துறைகளில் 2006 முதல் 2012-ஆம் ஆண்டு வரை பணியாற்றிய 375 கடைநிலை ஊழியா்கள் நிரந்தர ஊழியா்களாக மாற்றப்படுவாா்கள்.

சுகாதாரத் துறைக்கு அதிகப்படியாக ரூ.4,797.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 5,500 கோடி மதிப்பில் ஆயுதங்கள் உக்ரைனுக்கு வழங்கும் பிரிட்டன்

**கீவ், பிப்.15:**

உக்ரைனுக்கு 5,500 கோடி மதிப்பிலான புதிய ஆயுதத் தொகுப்பை வழங்குவதாக பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது. பிரஸ்ஸல்ஸ் நகரில் நேட்டோ பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கேற்புடன் நடைபெற்ற உக்ரைன் பாதுகாப்புத் தொடர்பு குழுவின் கூட்டத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜான் ஹீலி இந்த அறிவிப்பை வெளியிட்டார். தங்கள் நாட்டுப் பாதுகாப்புக்கு வான்பாதுகாப்பு அமைப்புகளை வழங்க வேண்டும் என ஜெலன்ஸ்கி தொடர்ந்து கேட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பில் அதற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயற்கையை அழிக்கும் டிரம்ப் காலநிலை மாற்ற விதிகள் நீக்கம்



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான நிர்வாகம், பசுமை இல்ல வாயுக்கள் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்ற அறிவியல் ரீதியான முடிவை அதிகாரப்பூர்வமாக ரத்து செய்துள்ளது. அத்துடன், கார்கள் மற்றும் லாரிகளுக்கான புகை வெளியேற்றத் தரக்கட்டுப்பாடுகளையும் நீக்கியது. டிரம்ப் பதவி ஏற்றது முதல் சூரிய ஆற்றல் உள்ளிட்ட பசுமை எரிபொருள் உற்பத்தி திட்டங்களைத் தடுக்க, சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல கொள்கைகளை மாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பாவை உலுக்கிய நில்ஸ் புயல்



பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கலின் சக்திவாய்ந்த ‘நில்ஸ்’ புயல் வீசியதுடன் கனமழை பொ ழிந்தது. இதன் காரணமாக பிரான்சில் மட்டும் சுமார் 4.5 லட்சம் வீடுகளுக்கான மின்சாரம் துண்டிக்கப் பட்டுள்ளது. மேலும் அந்நாட்டில் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்துள்ளார். புயலின் காரணமாக விமானம், ரயில் மற்றும் படகு என முக்கிய போக்குவரத்துகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சாலைப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. புயல் பிரான்ஸ் நாட்டை கடந்து கிழக்கு நோக்கி நகர்ந்துவிட்டாலும், சில பகுதிகளில் இன்னும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஆயுதம் வாங்க தைவானுக்கு அழுத்தம் சீனாவை சீண்டும் அமெரிக்கா

தைவானின் அரசியல் கட்சிகள் தங்கள் ராணுவத்துக்கான செலவுகளை அதிகரிக்க ஆதரவளிக்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்துள்ளனர். தைவான் தன் நாட்டின் ஒரு பகுதி என்பதே சீனாவின் நிலைப்பாடு. ஆனால் தைவானை தனது அரசியல் நோக்கத்துக்காக அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் தைவான் தனது ராணுவத்தை நவீனப்படுத்த பல பில்லியன் டாலர்களைச் செலவிட்டுள்ளது. இந்தச் சூழலில், சீனாவிடமி ருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தைவான் இன்னும் கூடுதல் ஆயுதங்கள் வாங்க வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் தருகிறது.

# காதலர் தினம்: அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வெளியிட்ட போஸ்டர்களால் பரபரப்பு

**வாஷிங்டன், பிப்.15:**




உலகம் முழுவதும் காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. இதுதொடர்பாக காதல் வாழ்க்கை மற்றும் உறவுகள் பற்றிய எண்ணற்ற பதிவுகளை நீங்கள் ஏற்கனவே பார்த்திருக்கலாம். ஆனால் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை முற்றிலும் மாறுபட்ட ஒன்றை தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ளது.

அதில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, கிரீன்லாந்து, குடியேற்றம் மற்றும் பல போன்ற உருவங்கள் மற்றும் முக்கியத்துவங்களைக் கொண்ட அரசியல் காதலர் அட்டைகளின் தொகுப்பாக இடம்பெற்றுள்ளது. படங்களில் உள்ள செய்தி, “உங்களுக்காகவே உருவாக்கப்பட்டது” என்று தெரிவிப்பதாக உள்ளது.

ஒரு படத்தில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் *“UR My Valentine”* என்று எழுதப்பட்ட “நிர்வாக உத்தரவை” வைத்திருப்பதைக் காணலாம்.

மற்றொரு அட்டையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, அமெரிக்காவால் பிடிக்கப்பட்டு நியூயார்க்கிற்கு நாடு கடத்தப்பட்டதைக் காட்டுகிறது. இந்தப் படம் காதலர் தின அட்டையைப்போல வடிவமைக்கப்பட்டுள்ளது, *“To:”* மற்றும் *“From:”* என்ற வரிகளுடன் முழுமையாக உள்ளது, மேலும் மதுரோ அமெரிக்காவிற்கு மாற்றப்படும்போது கண்கள் கட்டப்பட்டிருக்கும் புகைப்படமும் இடம்பெற்றுள்ளது. “நீ என் இதயத்தைக் கவர்ந்தாய்” என்று அட்டையில் எழுதப்பட்டுள்ளது.

மூன்றாவது அட்டையில், ஜனநாயகக் கட்சி செனட்டர் கிறிஸ் வான் ஹோலன், நீதிமன்ற உத்தரவை மீறி டிரம்ப் நிர்வாகத்தால் எல் சால்வடாருக்குத் தவறாக நாடு கடத்தப்பட்ட ஒருவரைச் சந்திப்பதைக் காட்டுகிறது. அவர்களின் படங்கள் இதய வடிவத்திற்குள் தோன்றும், அதில் “உங்கள் மீதான எனது அன்பு, சட்டவிரோத வெளிநாட்டினர் மீதான ஜனநாயகக் கட்சியினரின் அன்பைப்போலவே வலுவானது. உங்களுடன் மது அருந்த *1,537* மைல்கள் பறந்து செல்வேன்” என்ற வாசகத்துடன் உள்ளன.

மற்றொரு அட்டையில் கிரீன்லாந்தின் வரைபடம் அடங்கிய இதய வடிவிலான கிராபிக் இடம்பெற்றுள்ளது, மீண்டும் காதலர் தின கருப்பொருளைத் தொடரும் *“To:”* என்ற வரியுடன். சர்வதேச அளவில் கடுமையான கண்டனங்களைப் பெற்ற இந்த நடவடிக்கைக்கு டிரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார்,

# அர்ஜெண்டினாவில் சிறார் குற்றவாளிகளின் வயது 14 ஆக குறைப்பு

**வாஷிங்டன், பிப்.15:**

அர்ஜென்டினாவில் அதிகரித்து வரும் வன்முறை மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த, அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. அதன் படி, சிறார் குற்றவாளிகளாக கருதப்படும் வயது வரம்பை 16-லிருந்து 14 ஆக குறைக்கும் மசோதாவை அதிபர் ஜேவியர் மிலே தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் நிறைவேற்றியது.

போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் சிறுவர்களைப் பயன்படுத்தி படுகொலை உள்ளிட்ட கொடூரமான குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்கவே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் பாட்ரிசியா புல்ரிச் தெரிவித்தார்.

இந்த மசோதா தற்போது செனட் சபையின் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு உள்ளது.

ஒருபுறம் மக்கள் இதனை வரவேற்றாலும், மனித உரிமை ஆர்வலர்கள் சிறார்களைச் சிறையில் அடைப்பதால் அவர்களின் எதிர்காலம் சிதைந்துவிடும் என கவலை தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

# ரஷியா, உக்ரைன் இடையே அடுத்த வாரம் பேச்சுவார்த்தை; போர் முடிவுக்கு வருமா...?

**வாஷிங்டன், பிப்.15:**

உக்ரைன், ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 450வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார்.

போர் நிறுத்தம் தொடர்பாக ஏற்கனவே பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், ஒரு சில நிபந்தனைகளுக்கு இரு நாடுகளும் ஒப்புக்கொள்ளாததால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கா முயற்சியால் மீண்டும் ரஷியா, உக்ரைன் இடையே பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவாவில் அடுத்த வாரம் 17 மற்றும் 18 ஆகிய இரு நாட்கள் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு சுமார் 4 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உக்ரைன், ரஷியா இடையேயான போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, போரை ஜூன் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கெடு நிர்ணயித்துள்ளதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஏற்கனவே தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஓராண்டில் ஏஐ செய்யப்போகும் சம்பவம்: மைக்ரோசாப்ட் அதிகாரி பகீர் தகவல்

**வாஷிங்டன், பிப்.15:**

ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு டெக் உலகில் பெரும் புரட்சியையே ஏற்படுத்தியுள்ளது. பல மணி நேரம் மனித சக்தியால் செய்த வேலைகளை ஒரு நிமிடத்தில் எளிதாக முடித்து விடுகின்றன.

இதனால், ஏஐ பயன்பாடு பல்வேறு துறைகளிலும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து உள்ளது.

குறிப்பாக ஐடி துறையில் ஏஐ பெரும் புரட்சியையே உண்டு பண்ணிவிட்டது என்று சொல்லலாம்.

ஏஐ ஆதிக்கம் காரணமாக ஒயிட் காலர் வேலைகள் பெரும் அடியை சந்திக்கும் என்று அத்துறை சார்ந்த நிபுணர்கள் எச்சரித்து வருகிறார்கள். இது ஐடி உள்பட பல்வேறு துறையை சேர்ந்த ஊழியர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

இந்த நிலையில், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு பிரிவு தலைவர் முஸ்தபா சுலைமான் இது தொடர்பாக பேசியிருக்கும் தகவல்தான் தற்போது சர்வதேச அளவில் பணியாளர்கள் இடையே ஹாட் டாபிக்காக உள்ளது.

முஸ்தபா சுலைமான் கூறுகையில், அடுத்த 12 முதல் 18 மாதங்களில் வேலைவாய்ப்பு சந்தையில் ஏஐ மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக வெள்ளை காலர் *(white-collar)* பணிகளில் ஈடுபட்டு வருபவர்கள் அதிகமாக பாதிக்கப்படலாம்.

தினசரி கணினி முன் அமர்ந்து சட்டம், கணக்கியல், மார்க்கெட்டிங் அல்லது திட்ட மேலாண்மை போன்ற பணிகளில் ஈடுபடுபவர்களின் வேலைகளில் உள்ள அன்றாட டாஸ்க்குகளில் பெரும்பங்கை செயற்கை நுண்ணறிவு தானியங்கி முறையில் மேற்கொள்ளக்கூடும். மனிதர்கள் செய்யும் பல பணிகளை ஏஐ கருவிகள் துல்லியமாக முடிவுக்கும் என்பதால், இது சந்தையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்” என்றார்.

# காதலர் தினத்தை முன்னிட்டு சிறப்பு டூடுல் வெளியிட்ட கூகுள்



**வாஷிங்டன், பிப்.15:**

உலகம் முழுவதும் காதலர் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. தினமும் காதலை வளர்த்தாலும் காதலர் தினத்தை தங்களது ‘ஸ்பெஷல்’ தினமாக காதலர்கள் கருதுகிறார்கள். எனவே அவர்கள் கடற்கரை, பூங்கா, வணிக வளாகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட இடங்களில் இன்றைய தினம் அதிகளவில் கூடுவார்கள்.

இந்த நிலையில் காதலர் தினத்தை முன்னிட்டு கூகுள் நிறுவனம் சிறப்பு டூடுலை வெளியிட்டுள்ளது. இணைய தேடு பொறியில் முதன்மை நிறுவனமான கூகுள் நிறுவனம், சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற முக்கிய நாட்கள், பிரபலங்களின் பிறந்த நாட்கள் மற்றும் பண்டிகை காலங்களில் அதன் தேடு பொறியில் புதிய டூடுலை மாற்றியமைக்கும். அந்த வகையில் நேற்று காதலர் தினத்தை முன்னிட்டு சிறப்பு டூடுலை வெளியிட்டுள்ளது.

இந்த டூடுல் குறித்து கூகுள் தெரிவித்திருப்பதாவது:- “இன்றைய டூடுல் காதலர் தினத்தைக் கொண்டாடுகிறது. கைகளால் செய்யப்பட்ட பரிசுகளின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் ஒரு இதயப்பூர்வமான குறிப்பை எழுதினாலும், சுவையான விருந்தை தயார் செய்தாலும் அல்லது ஒரு சிறப்பு உணவுக்குத் தயார் செய்தாலும், நாம் அக்கறை கொண்டவர்களைக் கொண்டாட இது ஒரு அற்புதமான வாய்ப்பு. காதலர் தின வாழ்த்துக்கள்!”

இவ்வாறு தெரிவித்துள்ளது.

# வாட்ஸ் அப் வெப்பிலும் ஆடியோ, வீடியோ கால் வசதி: மெட்டா கொண்டு வரும் சூப்பர் அப்டேட்

**வாஷிங்டன், பிப்.15:**

வாட்ஸ்-அப் செயலியை உலக அளவில் சுமார் 300 கோடிக்கும் மேற்பட்ட பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர். டெக்ஸ்ட் மெசேஜ், போட்டோ, வீடியோ, ஆடியோ மற்றும் அழைப்புகளை மேற்கொள்ள வாட்ஸ் அப் தான் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிக்கூடம் தொடங்கி அலுவலகம் வரையில் இப்போது குழுக்களாக ஒருவருக்கு ஒருவர், ஒருவருக்கு பலர் என இதன் மூலம் தகவல்களை பரிமாறிக் கொண்டு வருகின்றனர். இதனால் வாட்ஸ் அப் செயலியின் பயன்பாடு தற்போது அத்தியவசியமாக மாறிவிட்டது என்று சொன்னால் அது மிகையல்ல.

வாட்ஸ் அப்பை பொறுத்தவரை சந்தையில் போட்டியை சமாளிக்க அவ்வப்போது புதிய அப்டேட்களை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், வாட்ஸ் அப்பில் வீடியோ கால், ஆடியோ கால் பேசுவது போல் இனிமேல் வாட்ஸ் அப் வெப்பிலும் ஆடியோ மற்றும் வீடியோ கால் பேசும் வசதியை மெட்டா நிறுவனம் கொண்டு வந்துள்ளது. விண்டோஸ் அல்லது மேக் இயங்குதளத்தில் தனியாக செயலிகளை டவுன்லோடு செய்ய வேண்டியது இல்லை என்றும் வரும் நாட்களில் இந்த அப்டேட் படிப்படியாக கொண்டு வரப்படும் என்றும் தெரிகிறது. இந்த அப்டேட், அலுவலக பணிகளில் ஈடுபடுவோருக்கு பெரும் உதவியாக இருக்கும் என கருதப்படுகிறது.

# அமெரிக்காவில் இந்திய மாணவர் மாயம் போலீசார் விசாரணை

**நியூயார்க், பிப். 15:**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் படித்து வரும் 22 வயது இந்திய மாணவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கர்நாடகாவைச் சேர்ந்த சாகேத் ஸ்ரீனிவாசய்யா (22 வயது) கலிபோர்னியாவின் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் முதுகலை படித்து வந்தார். இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் காணாமல் போனதாக போலீசார் தெரிவித்துள்ளனர். அவரது பாஸ்போர்ட் மற்றும் லேப்டாப் இருந்த பை, பார்க் ஹில்ஸ் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கடைசியாக டுவைட் வேயின் 1700 பிளாக்கில் சாகேத் ஸ்ரீனிவாசய்யா காணப்பட்டதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

இந்திய மாணவர் காணாமல் போயுள்ளது குறித்து, சான் பிரான்சிஸ்கோவில் உள்ள இந்திய தூதரகம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மாணவர் சாகேத் ஸ்ரீனிவாசய்யா காணாமல் போனது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரானை அச்சுறுத்தும் வகையில் 2-வது போர்க் கப்பலை அனுப்ப ட்ரம்ப் திட்டம்

**வாஷிங்டன், பிப்.15:**



ஈரானில் கொமேனி அரசுக்கு எதிராக மக்கள் உள்நாட்டு கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு கட்டுப்பாடுகளை எதிர்த்தும் சுதந்திரம் வேண்டியும் பொதுமக்கள் ஈரான் முழுவதும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது அரசு கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஈரான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்தார். அதற்காக ஏற்கெனவே ஒரு போர்க் கப்பலை மத்திய கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைத்தார். ஆனால், ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம் என்று ஈரானும் எச்சரித்தது.

இந்நிலையில், மத்திய கிழக்குப் பகுதியில் ஏற்கெனவே உள்ள போர்க் கப்பலுக்கு உதவியாக ‘யுஎஸ் எஸ் ஜெரால்டு ஆர் போர்டு’ என்ற 2-வது போர்க் கப்பலை அமெரிக்கா அனுப்பி வைக்கும் என்று அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தை சேர்ந்த உயரதிகாரி நேற்று தெரிவித்தார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுவதாக அதிபர் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார்.

அந்தப் பின்புலத்திலும் ஈரானில் உள்நாட்டு கலவரமும் சேர்ந்துள்ளதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதை தணிக்க ஓமன் மற்றும் கத்தாரில் ஈரான் - அமெரிக்கா உட்பட முத்தரப்பு பேச்சுவார்த்தை கடந்த வாரம் நடத்தப்பட்டது. எனினும், அந்தப் பேச்சுவார்த்தையில் சுமுக முடிவு எட்டப்படவில்லை.

இதையடுத்து, ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் ஏற்கெனவே இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடைபெற்றுவரும் சண்டை மத்திய கிழக்குப் பகுதி முழுவதும் பரவும் என்று வளைகுடா நாடுகள் எச்சரித்து வருகின்றன. இந்நிலையில் அமெரிக்கா 2-வது போர்க் கப்பலை மத்திய கிழக்குப் பகுதிக்கு அனுப்பினால் நிலைமை மோசமாகும் என்று அஞ்சப்படுகிறது.